வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

பக்கங்கள் : 16

விலை ரூ. 20/=

ஈழநாடு

Eelanadu

13.02.2021 சனிக்கிழமை




## இலங்கை நிலைமை மோசமாவதால்

# சுவிஸின் புகலிட நடைமுறைகளை மீள்பரிசீலனை செய்யக் கோரிக்கை

கொழும்பு,பெப்.13

சுவிஸ் அரசு ஈழத் தமிழ் அகதிகளுக்கு தஞ்சம் வழங்குவது தொடர்பான தனது நடைமுறைகளை மீளப் பரிசீலனை செய்ய வேண்டும் என்று அந்நாட்டின் அகதிகள் உதவி அமைப்பு (Swiss Refugee Assistance Organization - OSAR) கோரிக்கை விடுத்துள்ளது.

குடியேற்றவாசிகள் தொடர்பில் முன்னர் நல்லாட்சி அரசுடன் செய்து கொண்ட அகதிகளைத் திருப்பி அனுப்பும் உடன்படிக்கையை (bilateral immigration treaty) சுவிஸ் இடைநிறுத்த வேண்டும் என்றும் அந்த அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது. 02

# நேற்று மட்டும் 936 பேருக்கு கொரோனா

கொழும்பு,பெப்.13

நாட்டில் நேற்று மட்டும் 936 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதன்மூலம் நாட்டில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 74 ஆயிரத்து 52 ஆக அதிகரித்துள்ளது. 02

# வடக்கில் மீண்டும் சந்தை கொத்தணி?

## அச்சுவேலி சந்தையில் நால்வர் உட்பட நேற்று 10 பேருக்கு கொரோனா தொற்று

யாழ்ப்பாணம், பெப்.13

வடக்கு மாகாணத்தில் நேற்று 10 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இவர்களில் நால்வர் அச்சுவேலிச் சந்தையைச் சேர்ந்தவர்கள். இருவர் யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் தொற்றாளராக அடையாளம் காணப்பட்ட தனியார் பஸ் நடத்துநரின் மனைவி, பிள்ளை என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். 02

# உள்ளூர் மக்கள் எவருக்குமே புதிய வைரஸ் தொற்றில்லை

## வடக்கு சுகாதார பணிப்பாளர் தகவல்



யாழ்ப்பாணம், பெப். 13

"வவுனியா பம்பைமடு தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்க வைக்கப்பட்டிருந்த சைப்ரஸ் நாட்டிலிருந்து வந்தவர்களுக்குத்தான் பிரிட்டனில் பரவும் புதிய வகை கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டது. உள்ளூர் பொதுமக்களிடம் ஏற்பட்ட தொற்றில் அந்த வகை வைரஸ் 02

# கார் உள்ளிட்ட வாகனங்களின் இறக்குமதித் தடை தொடரும்

கொழும்பு, பெப். 13

கார் உள்ளிட்ட வாகனங்கள் மற்றும் அத்தியாவசிய பொருள்கள் மீதான இறக்குமதி கட்டுப்பாடுகள் தொடர்ந்து செயல்படுத்தப்படும் என்று மத்திய வங்கி ஆளுநர் பேராசிரியர் டபிள்யூ.டி. லக்ஷ்மன் தெரிவித்துள்ளார்.

குறுகிய காலத்தில் சில சிரமங்களை எதிர்கொள்ள நேரிட்டாலும் இந்த நடைமுறை நீண்ட காலத்திற்கு ஒரு முக்கியமான கொள்கையாகும் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார். 02

# மேலும் 05 பேர் மரணம்!

கொழும்பு, பெப். 13

கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 05 பேர் நேற்று உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைய இலங்கையில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 384 ஆக அதிகரித்துள்ளது.

# கொச்சிக்கடை தேவாலயத்துக்கு எச்சரிக்கை மொட்டைக்கடிதம்!

## புலனாய்வுப் பிரிவு பல கோணங்களில் விசாரணை



கொழும்பு,பெப்.13

2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் போன்று இலங்கையில் மீண்டும் தாக்குதல் இடம்பெறலாம் என்கின்ற மொட்டைக்கடிதம் காரணமாக புலனாய்வுப் பிரிவினர் பல கோணங்களில் தீவிர விசாரணைகளை ஆரம் 02

# கொரோனா அச்சுறுத்தலுக்கு மத்தியில் 1682 சுற்றுலாப்பயணிகள் இலங்கைக்கு

கொழும்பு,பெப்.13

கொரோனா வைரஸ் தொற்றுத் தாக்கத்தையுடுத்து, இவ்வருடம் ஜனவரி 21ஆம் திகதிக்குப் பின்னரான இதுவரையான காலப்பகுதியில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் 1682 பேர் இலங்கைக்கு சுற்றுலா மேற்கொண்டுள்ளனர் என இலங்கை சுற்றுலா மேம்பாட்டு அதிகார சபை தெரிவித்துள்ளது.

சீனா, உக்ரைன் மற்றும் பெலாரஸ் ஆகிய நாடுகளிலிருந்தே சுற்றுலாப் பயணிகளே இலங்கைக்கு சுற்றுலா மேற்கொண் 02

# பிரதமரின் கூற்றை இராஜாங்க அமைச்சர் மாற்ற முடிந்தமைக்கு இருபதே காரணம்!

## கரு ஜயசூரிய சுட்டிக்காட்டு

கொழும்பு,பெப்.13

கொரோனா வைரஸ் தொற்றால் மரணிப்பவர்களை அடக்கம் செய்வது தொடர்பான பிரதமரின் கூற்றை மாற்றியமைப்பதற்கு இராஜாங்க அமைச்சர் ஒருவரால் முடிந்தது. இது 20 ஆவது திருத்தத்தின் எதிர்மறையான விளைவாகும் என முன்னாள் சபாநாயகரும் சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவருமான கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸால் மரணிப்பவர்களை அடக்கம் செய்ய அனுமதி வழங்குவதாகி பிரதமர் பாராளுமன்றத்தில் தெரிவித்து, மறுநாள் அவரின் கூற்றுக்கு மாற்றமாக இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்திருந்த கருத்து தொடர் 02

# இரட்டை நிலைப்பாட்டில் அரசு ஐ.நாவில் முறையிடவேண்டும்!

## சிவாஜிலிங்கம் வலியுறுத்தல்

கொழும்பு,பெப்.13

அரசாங்கம் இரட்டை நிலைப்பாட்டுடன் செயல்படுகின்றது என்பதன் வெளிப்பட்டுள்ளது. முஸ்லிம் மக்களின் ஜனாஸாக்கள் அடக்கம் செய்ய அனுமதி வழங்கப்படும் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வழங்கிய வாக்குறுதியை நிராகரித்து தொற்று நோய்த் தடுப்பு இராஜாங்க அமைச்சரும், கொரோனா கட்டுப்பாட்டு விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சருமான சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே எதிர்க்கருத்தை வெளிப்படுத்தியுள்ளார் என வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார். 02

## சுவிஸின் புகலிட...

இலங்கையில் சிவில் நிலைமைகள்
மோசமடைந்து வருவது தொடர்பில்
தனது பிந்திய அறிக்கை ஒன்றில் கவலை
வெளியிட்டிருக்கின்ற சுவிஸ் அகதிகள்
உதவி அமைப்பு, ஐ.நா. மனித உரிமை
கள் ஆணையாளரது அண்மைய பரிந்து
ரைகளுக்கு ஏற்ப இலங்கை அகதிகளுக்
குத் தஞ்சம் வழங்குதல், அவர்களை
நாட்டுக்குத் திருப்பி அனுப்புதல் தொடர்
பான நடைமுறைகளை சுவிஸ் சமஷ்டி
அரசின் குடியேற்றத்துக்கான செயலகம்
(State Secretariat for Migration- SEM) மீளப்
பரிசீலிக்க வேண்டும் என்றும் கோரிக்கை
விடுத்துள்ளது.

இலங்கையில் உள்நாட்டுப் போர்
முடிவடைந்து நல்லிணக்க நிலைமை
தோன்றியதை அடுத்து கடந்த 2016,
2018 ஆண்டுகளில் அன்றைய வைத்திரி
பால சிறிசேன அரசுடன் சுவிஸ் அரசு
பரஸ்பர புரிந்துணர்வு உடன்படிக்கை
களைக் கைச்சாத்திட்டிருந்தது.

தொழில் நிமித்தம் குடியேறுவோர்,
அகதிகள், தஞ்சம் மறுக்கப்பட்ட அகதி
களைத் திருப்பி அனுப்புதல், குடியேறி
கள் பரிமாற்றம் ஆகியனவற்றை உள்ள
டக்கிய அந்த உடன்படிக்கைக்கு அது
கொழும்பில் கைச்சாத்திடப்பட்ட சம
யத்தில் சுவிஸ் அகதிகள் உதவி அமைப்
பும், சர்வதேச மன்னிப்புச் சபையும் கண்
டனம் வெளியிட்டிருந்தன.

அண்மையில் ஐ.நா. மனித உரிமை
கள் ஆணையாளர் வெளியிட்ட இலங்கை
நிலவர அறிக்கை இலங்கையர்களுக்குத்
தஞ்சம் வழங்குகின்ற உறுப்பு நாடுகள்
தங்கள் புகலிடக் கொள்கைகளை மீள்பரி
சீலிக்க வேண்டிய அவசியத்தை ஏற்படுத்
தியுள்ளது என்று அகதிகள் நலன் பேணும்
அமைப்புக்கள் குறிப்பிட்டுள்ளன.

தஞ்சம் மறுக்கப்பட்ட இலங்கையர்
கள் நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்பட்
டால் அங்கு கைது, சித்திரவதை போன்ற
மீறல்களுக்கு மீண்டும் ஆளாக நேரிட

## இரட்டை...

இது குறித்து ஐ.நா.மனித உரிமைகள்
பேரவையில் முறையிடவேண்டும் என்
றும் அவர் வலியுறுத்தினார்.

யாழ். ஊடக அமையத்தில் இடம்
பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்
போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை
வருமாறு:

இதுமட்டுமன்றி தோட்டத் தொழி
லாளர்களின் ஆயிரம் ரூபா சம்பள விட
யம் தொடர்பில் பல தடவைகள் அமைச்
சரவைப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்ட
போதும், அதுவும் நடைமுறைப்படுத்
தப்படவில்லை.

இந்த விடயங்கள் தொடர்பில் ஜனா
திபதி செயலகமோ, பிரதமர் செயல
கமோ உத்தியோகபூர்வமான அறிக்
கையை வெளியிடவேண்டும்.

இனியும் ஜனாஸாக்கள் எரிக்கப்படு
மானால் அரசாங்கத்தின் இரட்டை
நிலைப்பாட்டுத் தன்மை உறுதிப்படுத்
தப்படும்.

எவ்வாறாயினும் இத்தகைய விட
யங்களில் நாம் ஒருமித்து செயல்பட
வேண்டும். அதேவேளை அரசின்
இரட்டை நிலைப்பாட்டுக்கு எதிராக
பொது அமைப்புக்களும், பாராளுமன்
றப் பிரதிநிதிகளும் குரல் கொடுக்க
வேண்டும்.

உடனடியாக ஜனாஸா எரிப்புத்
திட்டத்தை கைவிடவேண்டும். இல்லை
என்றால் அனைத்து முஸ்லிம் கட்சி
களும், தமிழ்க் கட்சிகளும் இணைந்து
முஸ்லிம் நாடுகளிடம் முறையிடுவதோடு
எமது மத உரிமைகள் மீறப்படுகின்றன
எனவே இவற்றைச் சுட்டிக்காட்டி ஐ.நா.
மனித உரிமைகள் பேரவையில் முறை
யிடவேண்டும்.

ஏற்கனவே இவ்விடயம் ஐ.நாவில்
பாரப்படுத்தப்பட்டுள்ளது. இதுதொடர்
பில் அரசாங்கம் செவிசாய்க்காது விட்
டால் அனைத்து இன மக்களும் ஒரு
மித்து அரசாங்கத்துக்கு எதிராக குரல்
கொடுக்கவேண்டிய நிலை ஏற்படும்-
என்றார். (அ-எ)

லாம் என்று அந்த அமைப்புக்கள் அச்சம்
வெளியிட்டுள்ளன.

சுவிஸ் நீதி அமைச்சின் தகவலின்படி
அந்நாடு சுமார் 51 ஆயிரம் இலங்கை
அகதிகளுக்குப் புகலிடம் வழங்கியுள்
ளது. அவர்களில் அரைவாசிப் பங்கினர்
சுவிஸ் குடியுரிமையைப் பெற்றுள்ளனர்.
மொத்த இலங்கை அகதிகளில் 95 வீத
மானவர்கள் தமிழர்கள் என்பது குறிப்பி
டத்தக்கது. (அ-எ)

## கார் உள்ளிட்ட...

சமீபத்திய பொருளாதாரக் கொள்கை
கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த
மத்திய வங்கி வளாகத்தில் நேற்று நடை
பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே
அவர் இதனைத் தெரிவித்தார்.

“இந்தியா, சீனா, ஜப்பான் போன்ற
நாடுகளில் இறக்குமதியைக் கட்டுப்படுத்
துவதன் மூலம், நாட்டின் தேவைகளை
நிறைவு செய்யும் வகையில் சூழல் வடி
வமைக்கப்பட்டுள்ளது.

கார்கள் உள்ளிட்ட அத்தியாவசிய
மற்ற பொருள்களை இறக்குமதி செய்
வதற்கான கட்டுப்பாடுகளை நீக்குவதற்கு
கொடுப்பனவு நிலுவை இன்னும் சரி
செய்யப்படவில்லை” என்றும் மத்திய
வங்கி ஆளுநர் தெரிவித்தார்.

அனைத்து பங்கு விலைச் சுட்டெண்
கொழும்பு பங்குச் சந்தையின் வரலாற்
றில் ஒரே நாளில் நேற்று மிக உயர்ந்தது.

அதன்படி, அனைத்து பங்கு விலைச்
சுட்டெண் இன்றைய நாள் முடிவில்
387.19 புள்ளிகளால் அதிகரித்து 7 ஆயி
ரத்து 985 புள்ளிகளாக உள்ளது.

## கொரோனா...

டுள்ளதுடன், ஏனைய நாடுகளில் இருந்து
சிறியளவிலான எண்ணிக்கையானோரே
இலங்கைக்கு சுற்றுலா மேற்கொண்டுள்ள
னர்.

எனினும் தற்போது ஏனைய நாடுளில்
இருந்து இலங்கை வரும் சுற்றுலாப்
பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்க
ஆரம்பித்துள்ளதுடன், இனிவரும் காலங்
களில் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணி
கள் எண்ணிக்கை கணிசமான அளவில்
அதிகரிக்க வாய்ப்பிருப்பதாக இலங்கை
சுற்றுலா மேம்பாட்டு அதிகார சபை
தெரிவித்துள்ளது.

இதேவேளை, இலங்கை - இந்தியாவுக்
கான விமான போக்குவரத்து சேவையை
மீண்டும் ஆரம்பிப்பதற்கான பேச்சு
வார்த்தை நடத்தப்பட்டு வருவதாக
இலங்கை சுற்றுலா மேம்பாட்டு அதிகார
சபை தெரிவித்துள்ளது. (அ-எ)

## பிரதமரின்...

பில் கரு ஜயசூரிய பதிவிட்டுள்ள டுவிட்
டர் அறிவிப்பிலேயே இவ்வாறு குறிப்
பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்
டுள்ளதாவது:

கொரோனா வைரஸ் நீரினால் பரவு
வதில்லை என இராஜாங்க அமைச்சர்
சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே பாரா
ளுமன்றத்தில் தெரிவித்ததை அடிப்படை
யாக்கொண்டு, எதிர்க்கட்சி உறுப்பினர்
ஒருவரால், கொரோனாவால் மரணிப்பவர்
களை அடக்கம் செய்ய ஏன் முடியாது
என பிரதமரிடம் கேட்கப்பட்டது.

அதற்கு பிரதமர் அடக்கம் செய்ய
அனுமதி வழங்குவோம் என பதிலளித்
திருந்தார்.

இவ்வாறான நிலையில் நேற்று முன்
தினம் பாராளுமன்றத்தில் இது தொடர்
பில் எதிர்க்கட்சியால் சுகாதார இராஜாங்க
அமைச்சரிடம் வினவப்பட்டபோது,

கொரோனாவால் மரணிப்பவர்களின்
சடலங்களை அடக்கம் செய்வது தொடர்
பில் அரசாங்கத்தின் தொழில்நுட்பக்
குழுவின் தீர்மானமே இறுதியானது என
இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்
னாண்டோபுள்ளே பதிலளித்திருந்தார்.

பிரதமர் தெரிவித்திருந்த கருத்தை
மாற்றியமைப்பதற்கு இராஜாங்க அமைச்
சருக்கு முடியுமாகியது, அரசமைப்பின்
20 ஆவது திருத்தத்தின் எதிர்மறையான
விளைவாகும் என்று குறிப்பிட்டுள்ளார்.
(அ-எ)

# ஹெரோயின் வைத்திருந்தவருக்கு மரண தண்டனை

கொழும்பு, பெப். 13

382 கிராம் 3 மில்லிகிராம் ஹெரோ
யின் போதைப்பொருள் வைத்திருந்தமை
மற்றும் விற்பனை செய்தமை தொடர்
பில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்
பட்ட நபருக்கு மரண தண்டனை விதிக்
கப்பட்டுள்ளது.

காலி மேல் நீதிமன்றம் இந்த
உத்தரவை நேற்று பிறப்பித்துள்ளது.

அக்மீமன பொலிஸ் பிரிவில்
குருந்துவத்தை கோனாமுல்ல பகுதியை



சேரந்த சுதத் நிஷாந்த என்ற 51 வயது
நபருக்கே இந்த தண்டனை விதிக்கப்
பட்டுள்ளது.

## கொச்சிக்கடை...

பித்துள்ளனர்.

இந்தக் கடிதம் அண்மையில்
கொழும்பு - கொச்சிக்கடை புனித
அந்தோனியார் தேவாலயத்துக்குக்
கிடைத்துள்ளது எனத் தெரிவிக்கப்
படுகின்றது.

பாடசாலை, மத வழிபாட்டுத்தலம்
ஆகிய பகுதிகள் மீது தாக்குதல் நடத்தப்
படலாம் என்று இந்தக் கடிதத்தில் எச்
சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கடிதத்தை அடுத்து கடற்கரை
பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு
செய்யப்பட்டுள்ளது. அத்துடன் கொச்
சிக்கடை தேவாலயத்தின் பாதுகாப்பும்
அதிகரிக்கப்பட்டுள்ளது எனத் தெரிய
வருகின்றது. (அ-எ)

## நேற்று மட்டும்...

நேற்று இரவு 7 மணியளவில் மேலும்
528 பேருக்கும் இரவு 9 மணியளவில் 408
பேருக்கும் கொரோனா தொற்று உறுதி
செய்யப்பட்டுள்ள நிலையில் இந்த அதி
கரிப்பு ஏற்பட்டுள்ளது.

இந்தத் தொற்றாளர்கள் அனைவரும்
ஏற்கனவே கொரோனா தொற்றுக்குள்ளா
னவர்களுடன் தொடர்பில் இருந்தவர்கள்
என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்
திர சில்வா தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில் கொரோனா
தொற்றுக்குள்ளானவர்களில் நேற்று 773
பேர் பூரண குணமடைந்து வீடுகளுக்குச்
சென்ற நிலையில் 66 ஆயிரத்து 984 பேர்
இதுவரை குணமடைந்துள்ளனர்.

இதனால் குணமடைந்தவர்களைத்
தவிர்த்து 6 ஆயிரத்து 689 பேர் தற்
பொழுது சிகிச்சை பெற்று வருகின்றனர்.

எனினும் கொரோனா தொற்று சந்
தேகத்தில் 639 பேர் வைத்திய கண்
காணிப்பில் இருந்து வருகின்றனர்.

இருப்பினும் கொரோனா தொற்றால்
இதுவரை 379 பேர் உயிரிழந்தனர். (அ-எ)

## வடக்கில் மீண்டும்...

இதனால் வடக்கில் மீண்டும் சந்தைக்
கொத்தணி ஏற்படக்கூடிய அபாய
நிலைமை காணப்படுவதாக எச்சரிக்கப்
பட்டுள்ளது.

வடக்கு மாகாண சுகாதார சேவைகள்
பணிப்பாளர் மேலும் தெரிவிக்கையில்-

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட
ஆய்வுகூடம், யாழ்.போதனா வைத்திய
சாலை ஆய்வுகூடம் ஆகியவற்றில்
நேற்று 689 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர்.
பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.
இவர்களில் 10 பேருக்கு கொரோனா
தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அச்சுவேலி பொதுச் சந்தையில் எழு
மாறாகப் பெறப்பட்ட மாதிரிகளின் அடிப்
படையில் நான்கு பேருக்கு கொரோனா
தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் - கொழும்புத்துறை -
கச்சேரி தனியார் பஸ் நடத்துநர் ஒருவருக்கு
கொரோனா தொற்று நேற்று முன்தினம்
கண்டறியப்பட்ட நிலையில் நேற்று
அவரது மனைவிக்கும், பிள்ளைக்கும்
கொரோனா தொற்று உறுதி செய்யப்
பட்டுள்ளது.

இதேவேளை, மன்னார் வைத்திய
சாலையில் சேர்க்கப்பட்ட மூவருக்கு
தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
அவர்களில் ஒருவர் முசலி வாடியில்
தொற்று ஏற்பட்டவருடன் நேரடித்
தொடர்புடையர் எனத் தெரிவிக்கப்
பட்டுள்ளது.

மற்றைய இருவரும் மன்னார் நகரைச்
சேர்ந்தவர்கள். அவர்கள் இருவரும்
கொரோனா அறிகுறிகளுடன் வைத்திய
சாலையில் சேர்க்கப்பட்டவர்கள்.

அத்துடன், முல்லைத்தீவு புதுக்குடி
யிருப்பில் ஒருவருக்கு கொரோனா
தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.
அவர் அண்மையில் தொற்றாளராக
அடையாளம் காணப்பட்டவருடன்
தொடர்புடையவர்-என்றார். (அ-எ)

## உள்ளூர்...

இல்லை. பொதுமக்கள் அச்சம் கொள்
ளத் தேவையில்லை”என வடக்கு
மாகாண சுகாதார சேவைகள் பணிப்பா
ளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெளிவு
படுத்தியுள்ளார்.

பிரிட்டனில் பரவிவரும் கொரோனா
வைரஸின் அதிக பரிமாற்றத்தைக்
கொண்ட பி 1.1.7 பரம்பரைக்கு சொந்த
மான புதிய மாறுபாடு கொழும்பு, அவி
சாவளை, பியகம மற்றும் வவுனியா ஆகிய
மாவட்டங்களில் தொற்றாளர்களிடம்
பெறப்பட்ட மாதிரிகளில் கண்டறியப்
பட்டுள்ளன என்று ஸ்ரீ ஜெயவர்தனபுர
பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, நோயெ
திர்ப்பு மற்றும் மூலக்கூறு மருத்துவ
நிறுவனத்தின் பணிப்பாளர், மருத்துவர்
சந்திம ஜீவந்திர அறிவித்திருந்தார்.

அதுதொடர்பில் விளக்கமளிக்கை
யிலேயே வடக்கு மாகாண சுகாதார
சேவைகள் பணிப்பாளர், மருத்துவர்
ஆ.கேதீஸ்வரன் மேற்கண்ட கருத்தைத்
தெரிவித்தார்.

“சைப்ரஸிலிருந்து வருகை தந்தோ
ருக்கு பிரிட்டனில் பரவும் கொரோனா
வைரஸின் பி 1.1.7 பரம்பரைக்கு சொந்த
மான புதிய மாறுபாடு தொற்றுள்ளமை
ஒருவாரத்துக்கு முன்பாக கண்டறியப்
பட்டது.

அவர்கள் வவுனியா பம்பைமடு தனி
மைப்படுத்தல் நிலையத்தில் தங்கவைக்
கப்பட்டிருந்தனர். அதனாலேயே ஸ்ரீ
ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக ஆய்
வில் வவுனியாவும் உள்ளடங்குகிறது.

உள்ளூர் மக்கள் எவருக்கும் இந்தப்
புதிய வகை வைரஸ் இல்லை என்று சுகா
தார அமைச்சு உறுதிப்படுத்தியுள்ளது.

அதனால் பொதுமக்கள் அச்சமடை
யத் தேவையில்லை” என்று வடமாகாண
சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரி
வித்தார்.

## சர்வதேச...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டிய சட்ட நடவடிக்கைகளில் அவ
நம்பிக்கையை வெளியிட்டு சர்வதேச நீதி
மன்றத்தை நாடப்போவதாக கூறியிருப்ப
தனை அவதானிக்கும் போது, ரியர்
அட்மிரல் சரத் வீரசேகர, பாராளுமன்ற
உறுப்பினர் விக்னேஸ்வரன் மீதான நட
வடிக்கை பற்றிக் கூறியுள்ளமை ‘கண்
ணாடி வீட்டுக்குள் இருந்து கல்லெறி
வது’ போன்ற நடவடிக்கையாகவே
இருக்கின்றது.

வடக்கு -கிழக்கு மக்கள் தமக்கு நீதி
வேண்டி சர்வதேச நீதி விசாரணையைக்
கோரி நிற்கும் தறுவாயில், பேராயர்
மல்கம் ரஞ்சித் ஆண்டகை உயிர்த்த
ஞாயிறு தொடர்பாக சர்வதேச விசார
ணையைக் கோரியிருப்பது, வடக்கு
- கிழக்கு மக்களின் கோரிக்கைகூட நியா
யமானது என்பதை நியாயப்படுத்துவ
தாகவும், இலங்கையின் நியாயாதிக்கத்
தில் தென்னிலங்கை மக்கள்கூட
நம்பிக்கை இழந்துள்ளதை எடுத்துக்
காட்டுவதாகவும் இருக்கின்றது.

ஈழநாடு
Eelanadu
13.02.2021 சனிக்கிழமை
சார்வரி, மாசி 01

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

e-mail: editor@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# மீண்டுமொரு தலைமைத்துவ மோதலா?

இலங்கையின் ஆளும் கட்சியான பொதுஜன பெரமுனவிற்குள் ஒரு தலைமைத்துவ மோதல் மெதுவாக கருக்கொள்கின்றதா? இவ்வாறானதொரு கேள்வி சமீப நாட்களாக மெதுவாக எட்டிப்பார்க்கின்றது. அண்மையில் தொழில்துறை அமைச்சர் விமல் வீரவன்ச லங்காதீப பத்திரிகைக்கு வழங்கிய நேர்காணலில், கட்சியின் தலைமைத்துவம் அதன் வெற்றிக்கு காரணமானவருக்கு வழங்கப்பட்டிருக்கவேண்டும் என்றவாறானதோர் அபிப்பிராயத்தை தெரிவித்திருந்தார். இதனை கடுமையாக ஆட்சேபித்திருந்த பொதுஜன பெரமுனவின் செயலாளர் சாகர காரியவசம், விமல் வீரவன்சவிற்கு கட்சியின் தலைமைத்துவம் தொடர்பில் பேசுவதற்கு எவ்வித உரிமையுமில்லை - அவரது கட்சியான தேசிய சுதந்திர முன்னணி தேசியளவில் இரண்டு லட்சம் வாக்குகளைக்கூட பெறமுடியாத கட்சி. எனவே, விமல் தனது கருத்திற்காக பொதுமக்களிடம் மன்னிப்பு கோர வேண்டுமென்று குறிப்பிட்டிருந்தார். இதனைத் தொடர்ந்தே தலைமைத்துவம் தொடர்பான சர்ச்சையொன்று பொதுஜன பெரமுனவிற்குள் ஏற்பட்டிருக்கின்றது. மஹிந்த ராஜபக்ஷவின் தலைமைத்துவத்தை அகற்றும் நோக்கிலேயே இவ்வாறானதொரு சூழ்ச்சி இடம்பெறுவதாக வாசுதேவ நாணயக்கார தெரிவித்திருக்கின்றார். இவற்றின் விளைவாக, ஆளும் பொதுஜன பெரமுன, தலைமைத்துவம் தொடர்பான ஒரு சொற்போருக்குள் சிக்குப்பட்டிருக்கின்றது.

கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது, ஐக்கிய தேசிய கட்சிக்குள் இடம்பெற்ற தலைமைத்துவ இழுபறியின் காரணமாகவே ஐக்கிய தேசிய கட்சி வீழ்சியுற்றது. இதன் விளைவாக ஐக்கிய மக்கள் சக்தியென்னும் புதிய எதிரணி உதயமானது. தலைமைத்துவ பிரச்னையின் காரணமாகவே சிறிலங்கா சுதந்திரக் கட்சி வீழ்ச்சியுற்றது. தற்போது பொதுஜன பெரமுனவிற்குள் அவ்வாறானதொரு விவாதம் கருக்கொள்கின்றது. இது, ஆளும் தரப்பிற்குள் எவ்வாறான அதிர்வுகளை ஏற்படுத்துமென்பதை பொறுத்திருந்துதான் நோக்க வேண்டும். பொதுஜன பெரமுனவை பொறுத்தவரையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷதான் அதன் தலைவராக இருக்க வேண்டும். ஆனால், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவே தற்போது தலைவராக இருக்கின்றார். அதிகாரமென்று நோக்கினால், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷதான் கட்சியை பொறுத்தவரையில் சர்வ வல்லமையுள்ளவர். 20ஆவது திருத்தச்சட்டத்தின் மூலம் மீளவும் பிரதமர் பெயளரவு பிரதமராகிவிட்டார்.

இவ்வாறானதொரு நிலையில் கட்சியின் முடிவு ஒருவரிடமும், நாட்டின் நிர்வாகம் தொடர்பான தீர்மானமெடுக்கும் முடிவு இன்னொருவரிடமும் இருக்கின்றது. இதனால் நடைமுறையில் சில சிக்கல்கள் இருக்க வாய்ப்புண்டு. ஆனால், மேற்படி தலைமைத்துவம் தொடர்பான விவாதங்களில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எந்தவோர் அப்பிராயத்தையும் தெரிவிக்கவில்லை. விமல் வீரவன்சவின் கட்சி சிறியதாயினும் தென்பகுதி சிங்கள மக்கள் மத்தியில் வீரவன்ச போன்றவர்களின் குரல்கள் கனதிமிக்கவை.

அதேபோன்றுதான் பிவிதுறு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்பன்பில போன்றவர்கள் சிறிய கட்சியின் சொந்தக்காரர்கள் என்றாலும்கூட முக்கியமான முடிவுகளின்போது அவர்களது கருத்துக்கள் நாட்டின் முக்கிய தீர்மானங்களில் பாரியளவில் செல்வாக்குச் செலுத்துகின்றன. கிழக்கு கொள்கலன் முனைய விடயத்திலும் விமல் வீரவன்ச போன்றவர்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டனர். இறுதியில் அவர்களது எதிர்ப்பிற்கு அமைவாகவே முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

விமல் வீரன்ச போன்றவர்கள் பரமசிவன் கழுத்திலிருக்கும் பாம்பு போன்றவர்கள். பாம்மை பரமசிவன் கட்டுப்படுத்தாத வரையில், அவர்களை கட்டுப்படுத்த முடியாது. பாம்புகள் தொடர்ந்தும் அச்சுறுத்திக் கொண்டுதான் இருக்கும். தற்போது ஏற்பட்டிருக்கும் தலைமைத்துவ விவாதம் எதிர்காலத்தில் மேலும் புதிய சச்சரவுகளை ஏற்படுத்தக் கூடும். இதனால் எதிர்பாராத மாற்றங்களும் ஏற்படலாம்.

# சர்வதேச நீதிமன்றின்மீது கவனத்தை திருப்பும் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை



- அலசுவது இராஜதந்திரி -

*‘ஒரு சிலரை சிலகாலம் ஏமாற்றலாம். ஆனால், எல்லோரையும் எல்லாக் காலமும் ஏமாற்ற முடியாது’ என்று பிரசித்தி பெற்ற அமெரிக்க ஜனாதிபதியான ஆபிரஹாம் லிங்கன் ஒரு தடவை கூறியிருந்தார்.*

*உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்று இவ்வருடத்துடன் இரு வருடங்கள் பூர்த்தியாகவுள்ள நிலையில் இதுவரை அப்பாரிய மனித அவலத்துக்குப் பொறுப்பானவர்கள் கைது செய்யப்படாமலும், உரிய வகையில் நீதி விசாரணைகள் நடத்தப்படாமலும் இருக்கின்ற நிலையில் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் தமது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளார்.*

*இரு தினங்களுக்கு முன்னர் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை கொழும்பில் நடத்திய பத்திரிகையாளர் மாநாடொன்றை நடத்தினார். 2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் கொழும்பு புனித அந்தோனியார் தேவாலயம் மற்றும் கொழும்பிலுள்ள பிரசித்தி பெற்ற மூன்று ஐந்து நட்சத்திர ஹோட்டல்கள், நீர்கொழும்பிலுள்ள தேவாலயம், மட்டக்களப்பில் உள்ள தேவாலயம் என்பவற்றில் உயிர்த்த ஞாயிறு தினத்தில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலில் மொத்தம் 258 பேர் கொல்லப்பட்டனர். 500 பேர் வரை காயமடைந்தனர்.*

*தலைநகர் கொழும்பு, குண்டுத் தாக்குதல்களுக்கு பரிச்சயமான நகராகும். வடக்கு - கிழக்கு யுத்தம் மும்முரமாக இடம்பெற்ற காலங்களில் இரத்தத்தை உறையவைக்கும் குண்டுத்தாக்குதல்கள் தற்கொலைக் குண்டுதாரிகளால் மேற்கொள்ளப்பட்டிருந்தன.*

**அதிர்ச்சியைத் தந்த தாக்குதல்கள்**

*ஆனால், வடக்கு - கிழக்கு யுத்தம் முடிவுக்கு வந்து பத்து ஆண்டுகள் பூர்த்தியான நிலையில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் முழு நாட்டையும் மட்டுமல்ல, சர்வதேச சமூகத்தையும் அதிர்ச்சியடைய வைத்திருந்தன.*

*வடக்கு - கிழக்கு யுத்தகாலத்தில் கொழும்பில் மேற்கொள்ளப்பட்ட குண்டுத்தாக்குதல்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் மீதே குற்றஞ்சாட்டப்பட்டு வந்திருந்தது.*

*ஆனால், 2019ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் குறித்து அதற்குப் பொறுப்பானவர்களை சட்டத்தின் முன்பாக நிறுத்துவதில் தாமதங்கள் ஏற்பட்டுள்ளமையே பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகையை கவலைகொள்ள வைத்துள்ளதுடன், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பாக சர்வதேச நீதிமன்றத்தைக்கூட நாட வேண்டிய நிலை தமக்கு ஏற்படும் எனவும் அவர் எச்சரித்துள்ளார்.*

*இலங்கையின் வடக்கு - கிழக்கு யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படும் படுமோசமான மனித உரிமை மீறல்களில் சரணடைந்தவர்கள் காணாமல் போனமை , மற்றும் அப்பாவி மக்கள்மீதான கண்மூடித்தனமான தாக்குதல்கள் என்பவை யுத்தக்குற்றங்கள் என்ற அடிப்படையில் சர்வதேச அனுசரணையோடு அல்லது சர்வதேச நீதிமன்றம் மூலமாக விசாரிக்கப்பட வேண்டுமென்பதே வடக்கு - கிழக்கில் நீதி வேண்டி நிற்கும் வடக்கு - கிழக்கு மக்களின் கோரிக்கையாக இருக்கின்றது.*

*இலங்கையின் நீதி - நியாயாதிக்கத்தின் மீது தமக்கு நம்பிக்கையில்லை என்ற வகையிலேயே வடக்கு - கிழக்கு மக்கள் சர்வதேச நீதி விசாரணையை தமக்கு ஏற்பட்ட இழப்புகள் தொடர்பாக வலியுறுத்தியிருந்தனர். தொடர்ந்து வலியுறுத்தியும் வருகின்றனர்.*

**விக்னேஸ்வரன் மீதான நடவடிக்கை**

*இந்நிலையில் பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகையும் உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பாக சர்வதேச விசாரணையைக் கோரியிருப்பதை நோக்கும் போது, வடக்கு - கிழக்கு மக்களின் சர்வதேச நீதி விசாரணைக்கோரிக்கை எவ்வளவு தூரம் நியாயமானது என்பது புலனாகியுள்ளது.*

*கூடவே, இலங்கையின் மிக முக்கிய ஆன்மீகத் தலைவரான பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகைகூட இலங்கையின் நியாயாயத்தின்மீது நம்பிக்கை இழந்துள்ளார் என்பதையே அறிய முடிகின்றது.*

*இத்தருணத்தில், பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசருமான சி. வி. விக்னேஸ்வரன் அண்மைக்காலங்களில் தெரிவித்துவரும் கருத்துக்கள் தொடர்பாக அவர்மீது வழக்கு தொடரப்போவதாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர எச்சரித்துள்ளார்.*

*இருந்தபோதிலும், பேராயர் மல்கம் ரஞ்சித் உயித்த ஞாயிறு குறித்து எடுக்கப்பட*

(02ஆம் பக்கம் பார்க்க)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
ஊக்கமும், உற்சாகமும் குடிகொள்வதால் முயற்சி வெல்லும். புதிய பாதை புலப்படும். எடுத்த முயற்சி வெற்றி பெறும். மற்றவர் கருத்தை ஏற்றுக்கொள்வதில் தவறில்லை.

**இடபம்**
வெளிநாட்டிலிருந்து ஒரு சந்தோஷ செய்தி தேடி வரும். நண்பரின் ஒத்துழைப்பால் சுவாரஸ்யமான நாளாக அமையும். யார் விரும்பினாலும் நியாயமான விஷயத்தைச் செய்வீர்கள்.

**மிதுனம்**
எண்ணம் நிறைவேற நேர்மையான முயற்சி செய்வீர்கள். உண்மையின் பக்கம் நிற்பது நல்லது என்று உணர்வீர்கள். ஒவ்வாத உணவுகளை உட்கொள்வதை தவிர்க்க வேண்டும்.

**கடகம்**
மனதில் நினைப்பதை எல்லாம் வெளியிட வேண்டாம். இங்கிதமாக நடந்து கொள்வது நல்லது. அவசர சண்டை வேண்டாம். உங்கள் உயர்வை வெளிப்படுத்தும் செயல் ஒன்றைச் செய்வீர்கள்.

**சிம்மம்**
பழைய நண்பர்களின் புதிய தொடர்பால் பரவசம் அடைவீர்கள். தேவையற்ற விவகாரங்களில் தலையிடுவதை தவிர்க்கவும். தடைகள் அகலும். உற்றவர்கள் நலனில் அக்கறை கொள்வீர்கள்.

**கன்னி**
வீடு, இடம் வாங்க எடுத்த முயற்சி வெற்றி தரும். பயம் தீரும். பாராட்டுக்கிடைக்கும் சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். நேற்று ஏற்பட்டிருந்த வருத்தங்கள், கவலைகள் தீரும்.

**துலாம்**
எது சரி எது தவறு என்பதை உற்றவர் எடுத்துச் சொல்வர். உணவு கட்டுப்பாடு அவசியம். நல்லவர் என்று நம்பும் முன் யோசியுங்கள். கடுமையான விவாதங்கள் நன்மை தராது என்று உணர்வீர்கள்.

**விருட்சிகம்**
மதியத்திற்கு மேல் நல்ல செய்தி ஒன்று வந்து மகிழ்ச்சி தரும். நல்ல செய்தி கிடைக்கும். விரோதிகள் விலகுவதால் நிம்மதி வரும். மகிழ்ச்சி கூடும். திட்டமிட்ட விஷயத்தில் மாற்றம் செய்வீர்கள்.

**தனுசு**
உற்சாகமான விஷயங்கள் நடைபெற்று மனமகிழ்ச்சி அளிக்கும். மற்றவர்களிடம் பணிந்து பேசி நன்மைகளைப் பெறுவீர்கள். கோபத்தைவிட அன்பு நன்மை செய்யும் என்பதை உணர்வீர்கள்.

**மகரம்**
விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். மாற்றம் பற்றிச் சிந்திக்க வேண்டிய தேவை வரும். எடுத்த விஷயத்தில் எளிதில் வெற்றி கிடைக்கும். புதிய பாதை புலப்படும் நாள். நன்மை உண்டு.

**கும்பம்**
குடும்ப ஒற்றுமைக்கு எடுத்த முயற்சி வெற்றி பெறும். நண்பர்கள், உறவினரிடையே பேசி அவர்களை சேர்த்து வைப்பீர்கள். உரியவர்களிடம் மனம் திறந்து பேசி வியப்பூட்டுவீர்கள்.

**மீனம்**
முயற்சி ஒன்றில் வெல்ல நண்பர்களின் ஆதரவு கிடைக்கும். மறைமுக போட்டிகளை, முனைப்புடன் முறியடிப்பீர்கள். முன்பைவிட வருமானமும், லாபமும் அதிகரிப்பதால் மகிழ்வீர்கள்.



# ஆராச்சிகட்டுவ கடலுணவு ஆலை பிரதமர் மஹிந்தவினால் திறப்பு

கொழும்பு,பெப்.13

**புத்தளம் ஆராச்சிகட்டுவ பிரதேசத்தில் நிறுவப்பட்டுள்ள லங்கா கடலுணவு தொழிற்சாலை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவினால் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை திறந்துவைக்கப்பட்டது.**

சர்வதேச சந்தையை இலக்காக கொண்டு மீன் ஏற்றுமதியில் ஈடுபடும் லங்கா கடலுணவு நிறுவனம் சுமார் 600 வேலை வாய்ப்புகளை உருவாக்கியுள்ளது.

சர்வதேச சந்தையை இலக்காக கொண்டு புதிய தொழிற்சாலையில் உயர் தரத்திலான மீன் பதப்படுத்தும் நடைமுறையை பிரதமர் பார்வையிட்டார்.

ஏற்றுமதி தரத்திலான லங்கா கடலுணவு தயாரிப்புகளை எதிர்காலத்தில் உள்ளூர் நுகர்வோருக்காக நாடு முழுவதும் உள்ள சந்தை வலையமைப்பின் ஊடாக பெற்றுக்கொள்ள முடியும்.

லங்கா கடலுணவு நிறுவனத்தின் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து நிறுவனத் தலைவர் சரத் கித்சிறி, இதன்போது பிரதமருக்கு விளக்கமளித்தமை குறிப்பிடத்தக்கது.

# பிரதமரின் அறிவிப்பில் சந்தேகம்

கொழும்பு, பெப். 13

முஸ்லிம்களின் ஜனாசாக்களை அடக்கம் செய்ய அனுமதிக்க முடியும் என பிரதமர் பாராளுமன்றில் முன்வைத்த கருத்து தொடர்பில் சந்தேகம் எழுந்துள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரின் போது, நற்பெயரை பெறும் நோக்கிலா, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கொவிட் தொற்றால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் ஜனாசாக்களை அடக்கம் செய்ய அனுமதி வழங்கியுள்ளார் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹேச விதானகே கேள்வி எழுப்பியுள்ளார்.

# உரும்பிராய் சந்திரோதயவில் திறன் வகுப்பறை திறப்பு

யாழ்ப்பாணம், பெப்.

உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலையின் திறன் வகுப்பறைக் கட்டடத் திறப்பு விழா நேற்று இடம்பெற்றது. வகுப்பறைத் திறப்பு விழா பாடசாலை முதல்வர் வாசுகி பஞ்சாட்சரம் தலைமையில் இடம்பெற்றது. பிரதம அதிதியாக, யாழ். போதனா வைத்தியசாலை மருத்து நிபுணர் எஸ்.சிவன்சுதன் கலந்து கொண்டார்.

சுகாதார கட்டுப்பாடுகளுடன் திறப்பு விழா இடம்பெற்றது.

பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள் எனப் பலரும் நிகழ்வில் கலந்துகொண்டனர்.



# கிளிநொச்சியில் நடந்த விபத்தில் ஒருவர் காயம்

கிளிநொச்சி, பெப். 13

கிளிநொச்சி ஏ-9 வீதியின் பரந்தன் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் காயமடைந்து கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஏ-9 வீதிவழியாக பரந்தன் நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்றும் கப் ரக வகனம் ஒன்றுடன் மோதி விபத்து ஏற்பட்டுள்ளது.

நேற்று பிற்பகல் இடம்பெற்ற இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் காயமடைந்த நிலையில் கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் .

விபத்து தொடர்பான விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# புதுக்குடியிருப்புக் கோட்டத்தில் உள்ள 25 பாடசாலைகளுக்கு உபகரணங்கள்

முல்லைத்தீவு, பெப். 13

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு கோட்டத்திற்கு உட்பட்ட 25 பாடசாலைகளுக்கு, அபிமான நிறுவனத்தினால் மடிக்கணனிகள் உள்ளிட்ட இலத்திரனியல் பொருட்கள் வழங்கப்பட்டன.

மாணவர்களுக்கு தொடர் பாடல் தொழில்நுட்ப வசதியை பெற்றுக்கொடுக்கும் நோக்கில், புதுக்குடியிருப்புக் கோட்டத்திற்கு உட்பட்ட 22 பாடசாலைகளுக்கு மடிக் கணினியும், 25 பாடசாலைகளுக்கு ஸ்கிறீனும், 06 பாடசாலைகளுக்கு புரொஜெக்டர்களும் வழங்கப்பட்டன.

இதன்போது முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் உமாநிதி புவனராசா, அபிமான அபிவிருத்தி நிறுவனத்தின் பொறுப்பதிகாரி ஜெயவிலால் கஸ்தூரி ஆராய்ச்சி, திட்டமிடல் முகாமையாளர் சத்துரிக்கா, பிரதிக் கல்விப் பணிப்பாளர் சிவனருள்ராசா, திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் தாட்சாயினி, புதுக்குடியிருப்பு கோட்டக்கல்வி அதிகாரி எஸ். சுப்பிரமணியேஸ்வரன் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டு பாடசாலைகளுக்கு இலத்திரனியல் பொருட்களை வழங்கினர்.



# முஸ்லிம் சட்டங்களை மட்டுமே அரசால் குறிவைக்க முடியாது

## ரத்ன தேரருக்கு நீதி அமைச்சர் பதில்



கொழும்பு, பெப். 13

**முஸ்லிம் சட்டங்களை மட் டுமே குறிவைக்க முடியாது என் றும் ஒரு சட்டம் அல்லது கொள்கையைக் கண்டிப்பாக அமுல்படுத்த வேண்டுமானால் இலங்கையில் ஏனைய மதங்கள் பின்பற்றும் சட்டங்களும் இரத்து செய்யப்பட வேண்டும் என்றும் நீதியமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.**

ஒரு நாடு-ஒரு சட்டம் என்ற கொள்கையில் பயணிக்கும் இலங்கையில், காதி நீதிமன்றங்கள் தொடர்பாக அரசாங்கம் சிந்திக்கவேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் அண்மையில் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், அத்துரலிய ரத்ன தேரர் எழுப்பிய கேள்விக்கு நேற்று வெள்ளிக்கிழமை பாராளுமன்றில் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இலங்கையில் கண்டியன் திருமணம் மற்றும் விவாகரத்து சட்டம், யாழ்ப்பாணம் தேசவழமைச் சட்டம், முஸ்லிம் திருமணம் மற்றும் விவாகரத்து சட்டம் போன்ற பல தனியார் மத சட்டங்கள் நடைமுறையில் உள்ளன.

அவ்வாறு இருக்கும்போது, ஒரே ஒரு மதச் சட்டத்தை மட்டுமே அகற்ற முடியாது என்று சுட்டிக்காட்டிய நீதி அமைச்சர், கலந்துரையாடல்களுக்குப் பிறகு அதைத் திருத்த முடியும். அல்லது இலங்கையில் உள்ள அனைத்து தனியார் மதச் சட்டங்களும் ஒன்றாக ஒழிக்கப்படவேண்டும் எனவும் தெரிவித்தார்.

முஸ்லிம் பெண்கள் தங்கள் அனுமதியின்றி திருமணம் செய்து கொள்ளவில்லை என்றும் அவர்களின் ஒப்புதலுடன் அவ்வாறு செய்யப்படுகிறார்கள் எனவும் தெரிவித்த அமைச்சர், அதே நேரத்தில் அவர்களின் தந்தையர்கள் அவர்கள் சார்பாக குழந்தையின் சம்மதத்தை உறுதி செய்த பின்னரே திருமண ஆவணத்தில் கையெழுத்திட அனுமதிக்கப்படுகிறார்கள் எனவும் சுட்டிக்காட்டினார்.

தற்போதுள்ள இந்த நடைமுறையில் திருத்தம் செய்ய வேண்டுமென்றால், சம்பந்தப்பட்ட கட்சிகளுடனான கலந்துரையாடல்களைத் தொடர்ந்து இதைச் செய்ய முடியும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

கண்டியன் சட்டத்தின்படி திருமணத்திற்கான குறைந்த பட்ச வயது 16 என்றும், அதேபோல முஸ்லிம் சட்டத்தில் குழந்தையின் சம்மதத்துடன் 12 வயதுக்கு மேல் திருமணம் செய்ய முடியும் என்றும் நீதி அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

எவ்வாறாயினும், இது தொடர்பாக முஸ்லிம் சட்டத்தில் திருத்தங்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ள தாகவும், திருமணத்திற்கான குறைந்த பட்ச வயதை 18 ஆக திருத்தி 2002 இல் சவுதி அரேபியாவில் பிறப்பிக்கப்பட்ட நீதிமன்ற உத்தரவைப் பின்பற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

அத்தோடு, முஸ்லிம் பெண்களின் திருமணத்திற்கான குறைந்தபட்ச வயதை 18 ஆக திருத்துவதற்கு 2020 நவம்பரில் அமைச்சரவை முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டதாகவும் நீதி அமைச்சர் கூறினார்.

குழந்தை தனது சொந்த திருமண ஆவணத்தில் கையெழுத்திட அனுமதிக்க பரிந்துரைகளும் செய்யப்பட்டுள்ளன என்று கூறிய அமைச்சர் சப்ரி, இது தொடர்பாக ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளதாகவும் சட்டத்தில் திருத்தம் செய்ய முஸ்லிம் சமூகத்துடன் இணைந்து செயற்பட்டு வருவதாகவும் கூறினார்.

முஸ்லிம் சட்டம் எதிர்காலத்தில் தேவைக்கேற்ப திருத்தப் படும் என்று தான் நம்புவதாக அவர் மேலும் உறுதியளித்தார்.

# புதிய வைரஸ் குறித்து மக்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு, பெப். 13

பிரிட்டனில் இனங்காணப் பட்ட பி.1.1.7 என்ற புதிய வகை கொரோனா வைரஸ் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் இனங்காணப்பட்டுள ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதன்படி கொழும்பு, அவிசாவளை, பியகம மற்றும் வவுனியாவில் இருந்து இனங் காணப்பட்ட தொற்றாளர் களுக்கு இவ்வாறு புதிய வகை வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவை மிக வேகமாக பரவக் கூடும் என ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மரபணு உயிரியல் நிறுவனத்தின் பணிப் பளார் வைத்தியர் சந்திம ஜீவ ரத்ன தெரிவித்துள்ளார்.



# சிமெந்து ஏற்றிவந்த பாரவூர்தி தடம்புரள்வு

முல்லைத்தீவு, பெப். 13

திருகோணமலையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி சிமெந்து ஏற்றிச் சென்ற பாரவூர்தி தடம் புரண்டத்தில் ஒருவர் காய மடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று அதிகாலை இந்த விபத்து ஏ-9 வீதி மாங்குளம், பனிக்கன்குளம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

(அ)

# பொதுத் தேவைக்கு ஒதுக்கிய காணியை அபகரித்தவருக்கு எதிராகப் போராட்டம்

கிளிநொச்சி, பெப். 13

கிளிநொச்சி பச்சிலைப் பள்ளி சோரன் பற்று கிராமத்தில் பொது தேவைக்கு ஒதுக்கப் பட்டதாக குறிப்பிடப்படும் காணியை தனிநபர் ஒருவர் ஆக்கிரமித்தமைக்கு எதிராக கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

கிளிநொச்சி பச்சிலைப் பள்ளி பிரதேச செயலாளர் பிரிவின் சோரன்பற்று கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள கரந்தாய் பகுதியில் காணி சீர்திருத்த ஆணைக் குழுவுக்கு சொந்தமான காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளன.

இதில் பால் பண்ணை மற்றும் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் என பல்வேறு தேவைகளுக்கும் காணிகள் ஒதுக்கப்பட்டன. இதில் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்துக்கு ஒதுக்கப்பட்ட காணியை தனிநபர் ஒருவர் அடாத்தாக பிடித்து அபிவிருத்தி வேலைகளை முன்னெடுத்து வருகின்றமைக்கு எதிர்ப்பு தெரிவித்து கவனயீர்ப்புப் போராட்டம் நேற்று ஏ-9 வீதியில் கரந்தாய் பகுதியில் நடைபெற்றது.

இந்தக் காணியை பெற்று தருமாறு கோரி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா மற்றும் பிரதேச செயலாளர் ஆகியோருக்கு மகஜர்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

# மகளிர் தினத்தை முன்னிட்டு தற்காப்புக்கலை பயிற்சிநெறி

யாழ்ப்பாணம்,பெப்.13

மார்ச் மாதம் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகினால் முற்று முழுதாக மகளிர் பங்குகொள்ளும் 03 மாத கால தற்காப்புக்கலை (கராத்தே) இலவச பயிற்சிநெறி ஆரம்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சிநெறி யாழ்ப் பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் இரு நிலையங்களில் இடம்பெறும் என வும் வடக்கு மாகாணத்தை வதிவிடமாகக் கொண்ட அனைத்து யுவதிகளும் கலந்து கொள்ள முடியும் எனவும் கூறப் பட்டுள்ளது.

பயிற்சிநெறிக்கான இலவச சீருடை மற்றும் பயிற்சி முடிவில் சான்றிதழ் என்பனவும் வழங்கப்படும் என கூறப்பட்டுள்ளதுடன் விண்ணப்பப்படிவங்களை வடமாகாணக் கல்வி அமைச்சின் இணையத்தளத்திலிருந்து இலவசமாக தரவிறக்கம் செய்யவோ அன்றி நிகழ்நிலையில் படிவத்தை பூர்த்தி செய்யவோ அல்லது எமது அலுவலக வரவேற்பு உத்தியோகத்தரிடம் நேரடியாக பெற்றுக்கொள்ளவோ முடியும் எனவும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

# விமல் வீட்டு சந்திப்பு அரசியல் நாடகமா?

கொழும்பு,பெப்.13

அமைச்சர் விமல் வீரவன்ஸவின் வீட்டில் ஆளுங்கட்சி தலைவர்களின் சந்திப்பு இடம்பெறுமென அறிவிக்கப்பட்ட விவகாரம் ஒரு அரசியல் நாடகமா என்ற கேள்வியெழுந்துள்ளது. நேற்று முன் தினம் மாலை இந்த சந்திப்பு நடந்தது.

முன்னதாக, ஊடக நிறுவனங்களைத் தொடர்புகொண்ட அமைச்சர் வீரவன்ஸவின் ஊடகப்பிரிவு, பல அதிரடித் தகவல்கள் சந்திப்பின் முடிவில் வெளியிடப்படுமென அறிவித்தது.

இதையடுத்து சுமார் 3 மணித்தியாலங்களாக அமைச்சர் வீரவன்ஸவின் வீட்டுப் பகுதியில் ஊடகவியலாளர்கள் குழுமியிருந்தனர். அவர்கள் அங்குமிங்கும் சுற்றித்திரிந்ததுதான் மிச்சம்.

நாட்டின் நெருக்கடி நிலைமை குறித்து கவனம் செலுத்துவதற்காக 12 அரசியல் கட்சிகளின் தலைவர்களிடையே சிறப்பு கலந்துரையாடல் பிற்பகல் 3 மணிக்கு அங்கு நடத்த திட்டமிடப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இருப்பினும், கொழும்பில் உள்ள மலலசேகர மாவத்தவில் அமைச்சரின் இல்லத்தின் வாயில்கள் மூடப்பட்டன. அவ்வப்போது அத்துரலிய ரத்ன தேரர், வாசுதேவ நாணயக்கார, தயசிறி ஜயசேகர, டிரான் அலஸ் மற்றும் பிற அரசியல்வாதிகள் வீட்டுக்குள் நுழைந்தனர்.

அமைச்சர்கள் வீரவன்ஸ மற்றும் கம்மன்பில ஆகியோர் வீட்டுக்குள் இருந்தனர் என பாதுகாப்பு வட்டாரங்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தன.

கூட்டத்தின் இடையில் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார வளாகத்தை விட்டு வெளியேறினார். சிறிது நேரம் ஊடகங்களுடன் பேசிய அமைச்சர் இது சாதாரண விவாதம் என்று கூறினார்.

அமைச்சர் விமல் வீரவன்ஸவுக்கும் பொது ஜன பெரமுனவுக்கும் இடையிலான பிளவு இப்போது சரி செய்யப்பட்டு வருவதாகவும், பிரச்னை முடிந்துவிட்டது என்றும் அவர் கூறினார்.

பின்னர் மாலை 5.30 மணியளவில் பல அரசியல்வாதிகள் கருத்து தெரிவிக்காமல் வெளியேறினர்.

இறுதியாக அமைச்சர் உதய கம்மன்பில மாலை 5.45 மணியளவில் வெளியே வந்தார். இது ஆளும் கட்சி தலைவர்களின் சாதாரண சந்திப்பு மட்டுமே என்றும், தற்போதைய நெருக்கடி நிலைமை குறித்து விவாதித்தார் என்றும் அவர் கூறினார்.

அதன்படி, கலந்துரையாடலின்போது முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை. அமைச்சர் கம்மன் பில வெளியேறிய பின்னர், அமைச்சர் விமல் வீரவன்ஸ மற்றும் பிற அரசியல்வாதிகள் வீட்டின் மறு வாயிலினால் வெளியேறியதாக அவரது கட்சியினர் தெரிவித்தனர்.

## பி.சி.ஆர் மருத்துவ ஆய்வக ஊழியருக்கு கொரோனா!

கொழும்பு, பெப். 13

காட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திலுள்ள பி.சி.ஆர் மருத்துவ ஆய்வகத்தில் மாதிரி சோதனை ஊழியர் ஒருவர் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளார்.

இதனைத் தொடர்ந்து அவருடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த ஏனைய 6 ஊழியர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இதன் காரணமாக பி.சி.ஆர். சோதனை முடிவுகளைப் பெற சிறிது அழுத்தம் ஏற்பட்டுள்ளதாக கம்பாஹா மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகளின் மாவட்டப் பணிப்பாளர் டாக்டர் நளின் அரியரத்ன தெரிவித்தார்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் உள்ள மருத்துவ ஆய்வகத்தில் ஒரு நாளைக்கு சுமார் 5,000 பி.சி.ஆர். அறிக்கைகளை வெளியிடும் திறன் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஒரு ஏக்கருக்கு அதிக காணி உள்ள விவசாயிகளுக்கு துப்பாக்கி அனுமதி

கொழும்பு, பெப். 13

ஒரு ஏக்கர் பரப்புக்கும் அதிகளவில் காணியை கொண்டுள்ள விவசாயிகளுக்கு துப்பாக்கி அனுமதிப்பத்திரம் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றில் நேற்று முன்தினம் கருத்துரைத்த விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே இதனை குறிப்பிட்டார்.

பாதுகாப்பு அமைச்சுடன் கலந்துரையாடப்பட்ட பின்னரே இந்த தீர்மானம் மேற்கொள்ளப் பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்-

வனங்கள் அழிக்கப்பட்டு விவசாயம் மேற்கொள்ளப்படுவதானால் வனவிலங்குகளுக்கு உணவில்லாத பிரச்னை ஏற்படுகின்றது. எனவே, வனவிலங்குகள் உணவு தேடி விவசாய நிலங்களுக்குள் பிரவேசிக்கின்றன.

இதன் காரணமாக விவசாயத் துறைக்கு 25 வீதமான நட்டம் ஏற்படுகின்றது.

அவற்றிலும் அதிகமான பாதிப்பு காட்டுயானைகளின் பிரவேசம் காரணமாகவே இடம்பெறுகின்றன-என்றார்.

## தொற்றுள்ள மாணவர்களுக்கு விசேட பரீட்சை நிலையங்கள்

கொழும்பு, பெப். 13

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் தோற்றும் கொரோனா தொற்றுக்கு உள்ளான மாணவர்களின் நலன்கருதி மாட்ட ரீதியில்விசேட பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படும் என்று பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

கொரோனா தொற்றுக்கு உள்ளான பரீட்சார்த்திகள் இந்த பரீட்சை நிலயைங்களில் பரீட்சை எழுதலாம் என பரீட்சைகள் ஆணையாளர் சனத் பூஜித தெரிவித்தார்.

இதேவேளை, சுயதனிமைப்படுத்த அறிவுறுத்தப்பட்ட மாணவர்களுக்கு அனைத்து பரீட்சை ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. கல்விப் பொதுத் தராதரப் பரீட்சை எதிர்வரும் மார்ச் 01 முதல் 11 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முற்போக்கு கூட்டணிக்குள் முறுகல் நிலை உச்சத்தில்!

## தனிவழி செல்வாரா ராதாகிருஷ்ணன்?



**கொழும்பு, பெப். 13**

**மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்கு கூட்டணிக்குள் முறுகல்நிலை ஏற்பட்டுள்ளதாக நம்பகரமான அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.**

மனோ கணேசனின் ஜனநாயக மக்கள் முன்னணி, பழனி திகாம்பரம் தலைமையிலான தொழிலாளர் தேசிய முன்னணி, இராதாகிருஷ்ணன் தலைமையிலான மலையக மக்கள் முன்னணி ஆகியன கூட்டணியில் அங்கம் வகிக்கின்றன.

மலையகத்தில் உதயமான கூட்டணிகளுள் 4 வருடங்களுக்கு மேல் தாக்குப்பிடித்து நின்ற கூட்டணி என்ற பெருமை தமிழ் முற்போக்கு கூட்டணியையே சாரும். அவ்வாறானதொரு கூட்டணிக்குள்தான்தற்போது முறுகல்நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கு மலையக மக்கள் முன்னணியின் செயற்பாடே காரணம் என சுட்டிக்காட்டப்படுகின்றது.

அரசமைப்பின் 20ஆவது திருத்தச்சட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்த அரவிந்தகுமார் எம்.பியை, முற்போக்கு கூட்டணியிலிருந்து இடைநிறுத்திய நிர்வாகக்குழு, ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கும் பொறுப்பை மலையக மக்கள் முன்னணியிடம் ஒப்படைத்தது.

எனினும், மலையக மக்கள் முன்னணி இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை. மாறாக அரவிந்தகுமாரை கட்சியில் தக்கவைத்துக் கொள்வதற்கான நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

அதுமட்டுமல்ல சம்பள உயர்வு போராட்டத்துக்கான ஆதரவையும் மலையக மக்கள் முன்னணி தன்னிச்சையாக வெளியிட்டதால் இதர இரு பங்காளிகளும் அக்கட்சிமீது அதிருப்தியில் இருக்கின்றன.

இந்நிலையில் அடுத்துவரும் தேர்தல்களில் மலையக மக்கள் முன்னணி இல்லாமல்தான் போட்டியிடவேண்டும் என தொழிலாளர் தேசிய சங்க உறுப்பினர்கள் வலியுறுத்த ஆரம்பித்துள்ளனர். இவ்விடயம் உட்பட மேலும் சில காரணங்களாலேயே சர்ச்சை ஏற்பட்டுள்ளது.

## 178,087 பேருக்கு இதுவரை தடுப்பூசி

கொழும்பு, பெப். 13

நாட்டில் இதுவரை 178,087 பேருக்கு ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ரா செனெகா கொவிஷீல்ட் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன.

சுகாதார அமைச்சின் தொற்று நோய் விஞ்ஞானப்பிரிவு இதனை தெரிவித்துள்ளது. கடந்த 29 ஆம் திகதி முதல் இந்த தடுப்பூசி செலுத்தும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் நேற்று முன்தினம் மாத்திரம் ஆயிரத்து 362 பேருக்கு தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளதாக தொற்று நோய் விஞ்ஞானப்பிரிவு தெரிவித்துள்ளது.

## நீர்த்தேக்கத்தில் சடலமாக மீட்கப்பட்டார் மாணவி

கொழும்பு, பெப். 13

மேல் கொத்மலை நீர்த்தேக்கத்திலிருந்து மாணவியொருவரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தலவாக்கலையைச் சேர்ந்த 16 வயதுடைய பாடசாலை மாணவியொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றுக் காலை 6.30 மணியளவில் குறித்த மாணவி வீட்டிலிருந்து சென்றுள்ளதாக மேலதிக விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

மாணவி மேல் கொத்மலை நீர்த்தேக்கத்துக்கு குறுக்கே அமைந்துள்ள ரயில் பாலத்திருந்து நீர்த்தேக்கத்துக்குள் பாய்வதை பிரதேசவாசிகள் கண்டுள்ளனர் என தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர்.

மாணவி தனது தாயாருடன் ஏற்பட்ட மனக்கசப்பு காரணமாக இச்செயலை மேற்கொண்டிருக்கலாமென சந்தேகிப்பதாக தலவாக்கலை பொலிஸார் மேலும் கூறினர்.

மீட்கப்பட்ட சடலம் பிரேதப் பரிசோதனைகளுக்காக நுவரெலியா வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

# பரந்தன் இரசாயன தொழிற்சாலையை 2023 ஓகஸ்ட் முதல் மீள இயக்க ஏற்பாடு

கொழும்பு, பெப். 13

பரந்தன் இரசாயன தொழிற்சாலையை மீளவும் இயங்கச் செய்வதற்கான ஏற்பாடுகளை அரசாங்கத்தின் பரந்தன் கெமிக்கல் கம்பனி மேற்கொண்டுள்ளது.

இது தொடர்பான கலந்துரையாடல் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட செயலாளர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில், பரந்தன் கெமிக்கல் கம்பனி லிமிட்டட் நிறுவனத்தின் பொது முகாமையாளர் ஜீவானந்த விஜேசுந்தர, முகாமைத்துவ பணிப்பாளர் திஸ்ஸ லயனகே, நிபுணத்துவ ஆலோசகர் ராஜரட்ணம் மற்றும் றஞ்சித் முதலிகே ஆகியோர் கலந்துகொண்டு தொழிற்சாலையை மீள இயக்குவதற்கான தமது திட்ட முன்மொழிவை விளக்கிக் கூறினர்.

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத்தலைவர் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் மேலதிக இணைப்பாளர் கோ.றுஷாங்கன், மேலதிக அரசாங்க அதிபர், திட்டப் பணிப்பாளர், பிரதேச செயலாளர்கள் ஆகியோருடன், விவசாயம், மீன்பிடி, நீர்ப்பாசனம், நீர்வாழங்கல், நகர அபிவிருத்தி உள்ளிட்ட பல துறைகளின் பிரதிநிதிகளும் கலந்துகொண்ட இந்தக் கலந்துரையாடலில், தொழிற்சாலையை மீள இயங்கச் செய்வதற்கான திட்டம் விரிவாக விளக்கப்பட்டது.

திரவ வடிவிலான கொஸ்டிக் சோடாவை பிரதான உற்பத்தியாகக் கொண்டியங்கவிருக்கின்ற இந்தத் தொழிற்சாலை மூலம், மேலதிக விளைபொருட்களாக குளோரின், ஐதரோகுளோரிக் அமிலம், சோடியம் ஹைபோகுளோரைட் என்பனவும் உப உற்பத்திகளாக மேற்கொள்ளப்படும் என்று இதன்போது கெமிக்கல் கம்பனி பிரதிநிதிகள் விளக்கிக் கூறினர்.

இவை இதர பல உற்பத்தி முயற்சிகளான, சோப், சுத்திகரிப்பு திரவங்கள், துணி சுத்திகரிப்பு மற்றும் நிறமூட்டல், உணவு பதனிடல் என பல்வேறு செயற்பாடுகளுக்கு அவசியமான மூலப்பொருள்களாக அமையும் என்று குறிப்பிட்ட அவர்கள், இதன்மூலம் மேலும் பல கைத்தொழில்துறைகள் பயனடையும் என்றும் தெரிவித்தனர்.

பரந்தன் இரசாயன தொழிற்சாலையில் உற்பத்திசெய்யத் திட்டமிடப்பட்டுள்ள இந்த இரசாயன மூலப்பொருள்களின் தேவை தற்போது இறக்குமதி மூலமே நிறைவேற்றப்படுவதாகத் தெரிவித்த அவர்கள், இரசாயன தொழிற்சாலையின் செயற்பாடுகள் மீள ஆரம்பித்தால், இந்த மூலப்பொருள்களின் தேவையில் பெரும் பகுதி உள்ளூரிலேயே, குறைந்த செலவில் பூர்த்தி செய்யப்படும் எனவும் சுட்டிக்காட்டினர்.

2600 மில்லியின் ரூபா மதிப்பிடப்பட்டுள்ள இந்தத் தொழிற்சாலைச் செயற்றிட்டத்தை ஆரம்பிப்பதற்கான கட்டுமானப் பணிகளை எதிர்வரும் ஒக்ரோபர் மாதமளவில் ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளது.

2023 ஓகஸ்ட் முதல் இந்தத் தொழிற்சாலையின் செயற்பாடுகள் ஆரம்பிக்கும் என்று கூறிய பரந்தன் கெமிக்கல் கம்பனி லிமிட்டட் நிறுவனத்தின் பொது முகாமையாளர், ஜீவானந்த விஜேசுந்தர, இந்தத் தொழிற்சாலை உற்பத்திகள் மூலம் நாட்டின் மொத்தத் தேசிய உற்பத்திக்கான வடக்கு மாகாணத்தின் பங்களிப்பு மேலும் அதிகரிக்கும் என்றும் தெரிவித்தனர்.

இது இரசாயன தொழிற்சாலை என்பதால் சூழலுக்கு ஏற்படக்கூடிய மாசுக்கள் தொடர்பாக கூட்டத்தில் கலந்துகொண்ட பிரதிநிதிகள் எழுப்பிய சந்தேகங்களுக்கு பதிலளித்த கம்பனி பிரதிநிதிகள், தொழிற்சாலையின் செயற்பாட்டால் எழக்கூடிய ஒலி மாசு தொழிற்சாலை வட்டாரத்துக்குள்ளேயே கட்டுப்படுத்தப்பட்டுவிடும் என்றும், இதர திண்ம, திரவ மற்றும் வாயு வடிவ கழிவுகள் மீள்சுழற்சிப்படுத்தல் மூலமோ அன்றி பாதுகாப்பான கழிவகற்றல் பொறிமுறை மூலமோ சுற்றாடல் பாதுகாப்புத்துறையினரின் கண்காணிப்புடன் மேற்கொள்ளப்படும் என்றும் தெளிவுபடுத்தினர்.

# மேலும் 850 இலங்கையர் நாட்டை வந்தடைந்தனர்



கொழும்பு, பெப். 13

வெளிநாடுகளில் இருந்து நேற்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணி நேரப் பகுதிக்குள் 850 பயணிகள் நாட்டை வந்தடைந்தனர்

அதன்படி 10 விமானங்களினூடாக டுபாயிலிருந்து 108 பேரும் சவுதி அரேபியாவின் ரியாத்திலிருந்து 102 பேரும் வேறு நாடுகளில் இருந்து ஏனையவர்களும் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

விமான நிலையத்தை வந்தடைந்த பயணிகள் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக இலங்கை இராணுவத்தினரால் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

இதேவேளை இந்த காலகட்டத்தில் 10 விமானங்களினூடாக 843 பயணிகள் கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து புறப்பட்டுள்ளனர்.

இதன் அடிப்படையில் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் கடந்த 24 மணிநேரப் பகுதிக்குள் 20 பயணிகள் விமான சேவைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

# ஜெனிவாவில் புதிய பிரேரணைக்கு இந்தியா ஆதரவு வழங்கவேண்டும்!

## சுமந்திரன் எம்.பி. கோரிக்கை



**கொழும்பு, பெப். 13**

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 46 ஆவது கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக மனித உரிமைகள் சபையின் உறுப்பு நாடுகளால் கொண்டுவரப்படும் புதிய பிரேரணைக்கு இந்தியா கட்டாயம் ஆதரவு வழங்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இம்முறை நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக புதிய பிரேரணையைக் கொண்டுவரவுள்ள நாடுகளுடன் நாம் கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருகின்றோம். அந்த வகையில் இந்தியாவுடனும் தொடர்ந்து பேசி வருகின்றோம்.

இலங்கைக்கு எதிராக மனித உரிமைகள் சபையின் உறுப்பு நாடுகளால் கொண்டுவரப்படும் புதிய பிரேரணைக்கு இந்தியா கட்டாயம் ஆதரவு வழங்க வேண்டும்.

இந்தியாவில் ஏராளமான தமிழ் மக்கள் வாழ்கின்றார்கள். அவர்களின் உணர்வுகளையும் இந்திய மத்திய அரசு கவனத்தில் கொண்டு செயற்படும் என்றே நாம் நம்புகின்றோம் - என்றார்.

(அ)

# பிள்ளைகளை விளையாட்டுகளில் பங்கேற்க ஊக்குவிக்க வேண்டும்

## பிரதமர் மஹிந்த கோரிக்கை

கொழும்பு, பெப். 13

பாடசாலை காலத்திலிருந்தே பிள்ளைகளை விளையாட்டுகளில் பங்கேற்க ஊக்குவிக்கவேண்டும் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்ளார்.

ஆனைமடு கன்னங்கர வித்தியாலயத்தின் புதிய மூன்று மாடி கட்டடத்தை திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்-

உங்கள் அனைவரையும் சந்திக்க கிடைத்தமை குறித்து மகிழ்ச்சியடைகிறேன். எமது பிள்ளைகளுக்கு சிறந்த கல்வியை வழங்குவதே எமது அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும்.

நாம் எவ்வளவு பாடுபட்டாலும் குறிப்பிட்ட எண்ணிக்கையானோரே பல்கலைக்கழகத்துக்கு செல்ல முடியும். அதனால்தான் தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் தொழிற் பயிற்சி நிறுவனங்கள் தேவைப்படுகின்றன. விசேடமாக தொழில் பயிற்சி அதிகார சபையை உருவாக்கி, எமது பிள்ளைகளின் கரங்களை பலப்படுத்த நடவடிக்கை மேற்கொண்டோம்.

அவ்வாறு பிள்ளைகளின் கரங்களை பலப்படுத்தினால் அவர்களுக்கு வேலைவாய்ப்பை பெற்று கொள்வதற்கு கடினமாக அமையாது. எமது யுகத்தில் நாங்கள் இளைஞர் யுவதிகளுக்கு பயிற்சி அளித்து கொரியா மற்றும் ஜப்பானுக்கு அனுப்பத் தொடங்கினோம்.

எனக்கு நினைவிருக்கிறது முதல் முறையாக எங்கள் தொகுதியில் உள்ள இளைஞர்களை கொரியா செல்லுமாறு கூறியபோது நாங்கள் உங்களுக்காக வேலை செய்தது கொரியா செல்வதற்கு அல்ல என்று குற்றம் சாட்டினர். அதனை யடுத்து அதே கிராமத்தைச் சேர்ந்த ஒரு சகோதரியை அனுப்பினேன். அதன் பின்னர் முதலாவது சம்பளத்தை பெற்று அப்பணத்தை வீட்டுக்கு அனுப்பியவுடன் அந்த இளைஞர்கள் மீண்டும் ஓடிவந்து ஐயோ எங்களையும் அனுப்புங்கள் என கூறினர்.

அதுவரை கொரியா தொடர்பில் ஒரு விசித்திரமான நிலைப்பாடே காணப்பட்டது. ஆனால் இன்று அந்த நிலைப் பாடில்லை. இன்று எமது இளைஞர்கள் வெளிநாட்டிற்கு சென்று பணியாற்ற ஆர்வம் காட்டிவருகின்றனர். நாம் உங்களிடம் எதிர்பார்ப்பது என்ன? முடிந்தளவு பாடுபட்டு கல்வி கற்று எமது பல்கலைக் கழகத்திற்கு சென்று சிறந்த கல்விமான்களாகுங்கள்.



பல பாடசாலைகளில் விளையாட்டு மைதானங்கள் இல்லை. பாடசாலை காலத்திலிருந்தே பிள்ளைகளை விளையாட்டுகளில் பங்கேற்க ஊக்குவிக்க வேண்டும் என நான் எதிர்பார்க்கிறேன். பிள்ளைகள் புத்தக பூச்சிகளாக இருப்பதும் ஒரு பாரிய அழுத்தமாகும். எனவே, இந்த காலகட்டத்தில் நீங்கள் பெறும் அறிவு கல்விக்கு மட்டுமல்ல, விளையாட்டு மற்றும் தொழிற்பயிற்சிக்கும் பயனுள்ளதாக இருக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்-என்றார்.

# ஜனாஸா நல்லடக்கம் குறித்து இன்னுமே தீர்மானம் இல்லை

கொழும்பு, பெப். 13

கொரோனா வைரஸ் காரணமாக மரணிப்போரின் சடலங்களை அடக்கம் செய்வது தொடர்பிலான ஆலோசனைகள் சுகாதார அமைச்சின் மூலம் உரிய வழிமுறைகள் கிடைக்கப் பெற்ற பின்னர், அதற்கமைய செயற்பட முடியும் என சுகாதார அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் விசேட வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பாராளுமன்றில் பிரதமர் விடுத்த கருத்து தொடர்பாக மாத்திரமே தற்போது தகவல் கிடைத்துள்ளன. அவ்வாறான தீர்மானங்கள் மேற்கொள்ளப் படும்போது சுகாதார அமைச்சின் ஊடாக உரிய முறைமைகளுடனான வழிகாட்டல்கள் வழங்கப்படும்.

இதற்கமையவே மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் - என்றார்.

# லுணுகலை பகுதியில் நேற்று நிலநடுக்கம்

கொழும்பு, பெப். 13

லுணுகலை - ஹெக்கிரிய பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை சிறியளவான நிலநடுக்கமொன்று பதிவாகியுள்ளது.

ரிக்டர் அளவு கோலில் ஒரு புள்ளிக்கும் குறைவான அளவில் இந்த நிலநடுக்கம் பதிவாகியுள்ளதாக புவிச்சரிதவியல் அளவை சுரங்கப் பணியகத்தின் தலைவர் அநுர வல்பொல குறிப்பிட்டார்.

கடந்த 22ஆம் திகதி வலப்பனை பகுதிக்கு அருகில் 1.8 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் பதிவாகியிருந்தது.

அத்துடன் மடுல்சீமை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹெக்கிரிய பிரதேசத்திலுள்ள சில பகுதிகளிலும் நிலநடுக்கம் பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# சுதந்திரதின நிகழ்வில் பங்கேற்ற 50 பேருக்குக் கொரோனா உறுதி

கொழும்பு, பெப். 13

கொழும்பில் இடம்பெற்ற சுதந்திர தின நிகழ்வில் கலந்துகொண்ட 50 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சிவில் பாதுகாப்பு திணைக்களக் குழுவில் 50 பேருக்கே இவ்வாறு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் சுதந்திர தின நிகழ்வில் கலந்துகொண்ட கதிர்காமம் பொலிஸ் நிலையத்தின் போக்குவரத்துப் பிரிவின் நிலையப் பொறுப்பதிகாரிக்கும் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சுதந்திர தின நிகழ்வில் கலந்துகொள்வதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனைகளில் அவருக்கு தொற்று உறுதி செய்யப்படவில்லை. நிகழ்வின் பின்னர் கதிர்காமத்தில் வைத்து மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனைகளில் அவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பிணைமுறி மோசடி வழக்கு விசாரணைக்கு மூவரடங்கிய மேல்நீதிமன்ற நீதிபதிகள் குழு

## சட்டமா அதிபர் கோரிக்கை

கொழும்பு, பெப். 13

மத்திய வங்கி முறிகள் மோசடி தொடர்பிலான வழக்கு விசாரணைக்கு மூவரடங்கிய மேல் நீதிமன்ற நீதிபதிகள் குழாமை நியமிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சட்ட மா அதிபர் தப்புல டி லிவேரா, பிரதம நீதியரசரிடம் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க, மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரன், அர்ஜுன் அலோசியஸ், பேர்ப்பச்சுவல் ட்ரஷ்ரீஸ் நிறுவனம் உள்ளிட்ட 12 பேருக்கு எதிரான வழக்கு விசாரணைக்கே மூவரடங்கிய நீதிபதிகள் குழுவை நியமிக்குமாறே சட்ட மா அதிபர் கோரிக்கை விடுத்துள்ளார்.

2016ஆம் ஆண்டு மார்ச் 29ஆம் திகதி மத்திய வங்கியின் முறிகள் ஏலத்தின்போது இடம்பெற்ற மோசடி தொடர்பிலே இவர்களுக்கு எதிராக குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளதாக சட்ட மா அதிபரின் இணைப் பதிகாரி, அரச சட்டத்தரணி நிஷாரா ஜயரத்ன குறிப்பிட்டுள்ளார்.





# கடலுக்குள் புதைந்த தமிழர்களின் கண்டம்!

## அதுதான் குமரிக் கண்டமா?

விக்னேஷ்.அ
பிபிசி தமிழ்

கண்டப் பெயர்ச்சியால் இப்போதுள்ள கண்டங்கள் பல லட்சம் ஆண்டுகளுக்கு பிறகு மீண்டும் ஒரே கண்டமாகலாம் என்கின்றனர் ஆய்வாளர்கள்.

தற்போதைய தமிழக நிலப்பரப்பிற்கு தெற்கே லெமூரியா கண்டம் என்ற ஒன்று இருந்ததாகவும் அங்கு தமிழர்கள் வாழ்ந்ததாகவும் நீங்கள் ஏதாவது நூலிலோ, செய்தியிலோ, இணையதளத்திலோ குறைந்தது ஒரு முறையாவது படித்திருப்பீர்கள். இணையத்தில் இது பற்றிய காணொளிகளும் ஏராளம்.

ஆனால் லெமூரியா கண்டம் என்ற ஒன்று உண்மையாகவே இருந்ததா என்றால் அந்தக் கேள்விக்கான பதில் 'இல்லை' என்பதுதான்.

மொரிஷியஸ் தீவுகளைச் சுற்றியுள்ள பகுதிகளில், இந்தியப் பெருங்கடலுக்குள் புதைந்திருக்கும் குறுங்கண்டம் ஒன்றுக்கு 'மொரிஷியா' என்று அறிவியலாளர்கள் பெயரிட்டிருக்கிறார்கள். 2013 இல் கண்டுபிடிக்கப்பட்டது இது.

உண்மையைக் கலந்து சொன்னால் நம்பகத்தன்மை கிடைக்கும் எனும் நம்பிக்கையில், இந்த கண்டம்தான் லெமூரியா கண்டம் என்றும் சிலர் கூறி வருகிறார்கள்.

ஆனால், அது உண்மையல்ல. மனித குலத்தின் வரலாறு தொடங்கும் முன்னரே, இந்த நிலப்பரப்பு கடலுக்குள் மூழ்கி விட்டது.

90 லட்சம் ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்த எரிமலை வெடிப்பின்போது பூமிக்கு அடியில் இருந்த துகள்கள் மொரிஷியஸ் கடற்கரையில் கிடைத்தன. அந்தத் துகள்களில் செய்யப்பட்ட ஆய்வின் மூலம் மொரிஷியாவின் காலம் கண்டறியப்பட்டது.

இதன் காலம் 200 கோடி முதல் 8.5 கோடி ஆண்டுகளுக்கு முன்பு வரை என்கிறது நேச்சுர் ஜியோசயின்ஸ் சஞ்சிகையில் 2013 பெப்ரவரியில் வெளி யான கட்டுரை ஒன்று.

அப்படியானால் லெமூரியா கண்டம் எனும் கருத்தாக்கம் எப்படி உருவானது, அப்படி ஒரு கண்டமே இல்லை என்பதற்கு அறிவியல்பூர்வமான ஆதாரங்கள் இருக்கின்றனவா, தமிழ் இலக்கியங் களில் உண்மையாகவே லெமூரியா கண்டம் பற்றிய குறிப்பு உள்ளதா என்பனவற்றுக்கு பதில் தருகிறது இந்தக் கட்டுரை.

**லெமூரியா கண்டம் - 'கடலுக்குள் மூழ்கி அழிந்து விட்டது'**

பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த இங்கிலாந்தைச் சேர்ந்த விலங்கியலாளர் பிலிப் ஸ்கேட்லர் என்பவர் 'மடகாஸ்கரின் பாலூட்டிகள்' என்ற தலைப்பில் கட்டுரை ஒன்றை வெளியிட்டார்.

அதில் 'லெமூர்' விலங்குகளின் படிமங்கள் இந்தியப் பெருங்கடலில் உள்ள தீவு நாடான மடகாஸ்கரிலும் இந்திய நிலப் பகுதிகளிலும் இருக்கின்றன. ஆனால் மடகாஸ்கர் ஓர் அங்கமாக இருக்கும் ஆப்பிரிக்க கண்டத்தின் பெருநிலப்பரப்பில் இல்லை. எனவே கடந்த காலங்களில் மடகாஸ்கர் மற்றும் இந்தியா ஆகிய இரண்டு நிலப்பரப்புகளையும் இணைத்த, ஒரு கண்டம் இருந் திருக்கலாம். அப்போது லெமூர் விலங்குகள் இரு பகுதி களுக்கும் சென்று வந்திருக்கலாம் என்று கூறினார்.

அந்த கண்டத்தின் பெயர்தான் லெமூரியா என்றும் அது பின்னாளில் கடலுக்குள் மூழ்கி அழிந்து விட்டது என்றும் பிலிப் ஸ்கேட்லர் தனது கட்டுரையில் குறிப்பிட்டிருந்தார். லெமூரியா கண்டத்தின் வரைபடம் எனும் பெயரில், அறிவியல்பூர்வமாக உறுதிப்படுத்தப்படாத பல நூறு படங்கள் இணையத்தில் கிடைக்கின்றன.

இவர் இதை முன்வைத்தபோது ஏற்றுக்கொள்ளப்பட்ட இந்தக் கூற்று பிற்காலத்தில் அறிவியலாளர்களால் மறுக்கப்பட்டது. ஏன்?

**அறிவியல் வளர்ச்சியால் வெளியான உண்மைகள்**

பிலிப்ஸ்கேட்லர் 'லெமூரியா கண்டம்' என்ற ஒன்று இருந்ததாகக் கூறியபோது, இடையில் ஒரு நிலப்பரப்பு இருப்பதைத் தவிர, ஒரே விலங்கினம் கடலால் பிரிக்கப்பட்ட வெவ்வேறு நிலப்பரப்புகளில் வாழ்ந்திருப்பதற்கான வாய்ப்பு இல்லை என்றே கருதப்பட்டது. எனவே, அதை அறிவியல் உலகமும் ஏற்றுக்கொண்டது. புவிசார் அறிவியல் இந்த அளவுக்கு வளர்ச்சி அடையாத காலகட்டம் அது.

17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஐரோப்பிய புவியியலாளர் ஆப்ரகாம் ஓர்டெலியஸ் என்பவர் கண்டங்கள் அனைத்தும் ஒன்றாக இருந்து அதன்பின்பு அவை ஒன்றிடம் இருந்து ஒன்று நகர்ந்து வெவ்வேறு கண்டங்களாக உருவாகின எனும் கோட்பாட்டை முன்வைத்தார்.

ஒரு கண்டத்தின் வெளிப்புற வடிவம் இன்னொரு கண்டத்தின் வெளிப்புற வடிவத்துடன் பொருந்தும் வகையில் இருப்பதை அதற்கு அவர் சான்றாகக் குறிப்பிட்டிருந்தார்.. ஆனால், அவருக்குப் பின்னல் வந்த வெகுசில அறிவியலாளர்களைத் தவிர இதை யாரும் ஏற்றுக்கொள்ளவில்லை.

அதன்பின்பு இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஜெர்மானிய புவியியலாளர் ஆல்ஃப்ரெட் வெகேனர் கண்டப் பெயர்ச்சி (Continental Drift) கோட்பாட்டை முன்வைத்தார்.

அப்போது இதுவும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்றாலும் புவியத் தட்டுகள் (tectonic plates) நகர்தல் குறித்த கண்டுபிடிப்புகள் இதற்கு வலிமை சேர்ப்பதாகவும், அதை நிரூபணம் செய்யும் வகையிலும் அமைந்தன.

பல கோடி ஆண்டுகளுக்கு முன் தற்போது உள்ள அனைத்துக் கண்டங்களும் ஒரே நிலப்பரப்பாக இருந்தன என்றும் அதன்பின்பு, பூமியின் மேற்பரப்புக்கு அடியில் இருக் கும் புவியத் தட்டுகளின் நகர்தல் காரணமாக வெவ்வேறு கண்டங்கள் உருவானதும் பின்னாளில் நிரூபணமானது.

அவ்வாறு அனைத்து கண்டங்களும் ஒன்றாக இருந்த நிலப்பரப்பு, தற்போதைய தனித்தனி கண்டங்களாக உரு வாகும் முன்னர் பல முறை பிரிந்து பிரிந்து மீண்டும் இணைந்துள்ளன.

வெவ்வேறு காலத்தில் உருவான பெருங்கண்டங்கள் பான்கையா (pangea), ரொடினியா (rodinia) என்று வெவ்வேறு பெயர்களுடன் அறிவியலார்களால் அழைக்கப்படுகின்றன.

சுமார் 75 கோடி (750 மில்லியன்) ஆண்டுகளுக்கு முன்பு ரொடினியா என்ற பெரும் கண்டமாக தற்போதைய உலகில் உள்ள ஒட்டுமொத்த நிலப்பரப்பும் ஒன்றாக இருந்தது.

ரொடினியாவில் இந்தியா மற்றும் மடகாஸ்கர் ஆகிய நிலப்பரப்புகள் அருகருகே இருந்துள்ளன.

இவை இரண்டும் சுமார் 8.5 கோடி ஆண்டுகளுக்கு கண்டப் பெயர்ச்சி காரணமாகப் பிரியத் தொடங்கின. இதன் பின்னர்தான் இக்கட்டுரையின் தொடக்கத்தில் குறிப்பிடப்பட்டிருந்த 'மொரிஷியா' கடலுக்குள் மூழ்கத் தொடங்கியது.

புவியத் தட்டுகள் நகர்ந்து உண்டாக்கிய கண்டப் பெயர்ச்சி காரணமாகவே இந்தியா மற்றும் மடகாஸ்கர் இடையே இடைவெளி உண்டானது் அப்போது ஒரே நிலப்பரப்பாக இருந்தபோது வாழ்ந்த விலங்குகளின் படிமங்களே பின்னாளில் கிடைத்தன என்று தெரியவந்த பின், 'லெமூரியா கண்டம்' என்ற ஒன்று இல்லை என்றும் முடிவு செய்த அறிவியல் உலகம் பிலிப் ஸ்கேட்லர் முன்வைத்த கருதுகோளை மறுதலித்தது.

**குமரிக் கண்டம் - லெமூரியா கண்டம்**

லெமூரியா கண்டம் குறித்த கருதுகோள் ஏற்றுக்கொள்ளப்பட்டு இருந்த காலத்தில் ஆசியா மற்றும் அமெரிக்க கண்டங்களில் ஒரே விலங்கினங்கள் வாழ்ந்ததற்கான சான்றுகள் கிடைத்தபின், இடையில் நிலப்பரப்பு இருந்தது என்று கருதிய சில அறிவியலறிஞர்கள் பசிஃபிக் பெருங்கடலின் சில பகுதிகளிலும் லெமூரியா கண்டம் நீண்டிருந்தது என்று கூறினர்.

இதன்பின்பு கடலுக்குள் மூழ்கிய கண்டங்களாக லெமூரியா மற்றும் அட்லாண்டிஸ் ஆகியவை உலக அளவில் பெயர் பெறத் தொடங்கின. இது குறித்த விரிவான கட்டுரை ஒன்று புரொண்ட்லைன் இதழில் புவிநீர் அமைப்பியலாளர் எஸ். கிறிஸ்டோபர் ஜெயகரனால் 2011ஆம் ஆண்டு எழுதப்பட்டுள்ளது

லெமூரியா கண்டம் குறித்து மேற்குலகில் எழுதப்பட்ட கட்டுரைகள் மற்றும் வரைபடங்கள் 1941இல் கே.அப்பாதுரை என்பவர் எழுதிய 'குமரிக் கண்டம் அல்லது கடல் கொண்ட தென்னாடு' எனும் நூலில் பயன்படுத்தப்பட்டதாக அந்த கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்ச் சங்க காலத்திலும், அதன் பின்னரும் எழுதப்பட்ட புறநானூறு, சிலப்பதிகாரம், கலித்தொகை உள்ளிட்டவற்றின் பாடல்களில் கடலில் மூழ்கிய சில நிலப்பரப்புகள் பற்றிய குறிப்பும் உள்ளன.

சங்கப் பாடல்களில் குறிப்பிடப்பட்டிருந்த மலைகள், ஆறுகள், ஊர்கள் உள்ளிட்டவற்றின் பெயர்கள் லெமூரியா கண்டத்தில் இருந்ததாக தமிழில் எழுதப்பட்டதாகவும் இந்த கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார் கிறிஸ்டோபர் ஜெயகரன்.

அதாவது, உலகின் வெவ்வேறு பகுதியிலும் 'லெமூரியா' குறித்து தகவல், தங்கள் நிலப்படப்புடன் தொடர்புடையதாக மாற்றப்பட்டதைப் போல, தமிழ் இலக்கியத்தில் குறிப்பிடப்பட்டிருந்த தகவல்கள் லெமூரியாவுடன் பொருத்தப்பட்டன.

பின்னாட்களில் வந்த நக்கீரர், நச்சினார்க்கினியர், அடியார்க்குநல்லார் உள்ளிட்டவர்களின் எழுத்துகள் சிலப்பதிகாரம் மற்றும் கலித்தொகையில் கடலுக்குள் மூழ்கியதாக குறிப்பிடப்பட்டிருந்த நிலப்பரப்பை மிகைப்படுத்தி கூறியதாகவும் அவர்களின் கூற்றுப்படி குமரிக் கண்டத்தில் இருந்ததாக கூறப்படும் குமரி ஆறு மற்றும் பஃறுளியாறு ஆகியவற்றுக்கு இடையேயான தூரம் 770 கிலோமீட்டர் என்றும் அந்த கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

லெமூரியா கண்டம் வேறு குமரிக் கண்டம் வேறுதான் லெமூரியா கண்டம் என்பது ஒருவேளை பொய்யானதாக இருந்தாலும் பண்டைய இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ள குமரிக் கண்டம் என்பது உண்மைதான் என்று கூறும் ஒரு தரப்பினர் கடலில் மூழ்கிய நகரங்கள் குறித்து இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளவற்றை தங்கள் சான்றாக முன்வைக்கின்றனர்.

குமரிக் கண்டத்தில் 49 நாடுகள் இருந்ததாக கூறப்பட்டுள்ளது. ஆனால் வரலாற்றுக் காலத்தில் நாடு எனும் சொல் ஊர் எனும் பொருளில் பயன்படுத்தப்பட்டிருப்பதும், சில ஊர்கள் ஒன்று சேர்ந்தாலே நாடுகளாக இருந்துள்ளன என்பதும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

அதுமட்டுமல்லாது உலகில் இருக்கும் பல்வேறு பகுதிகளைப் போலவே, இன்றைய இந்தியாவின் கடலோரப் பகுதிகளும் கடல் அரிப்பின் காரணமாக கடலுக்குள் மூழ்கியதற்கான அறிவியல் சான்றுகள் நிறைய கிடைத்துள்ளன. ஆனால் 'கண்டம்' என்று கூறப்படும் அளவுக்கு பெரிய நிலப்பரப்புதான் மூழ்கியது என்பதற்கான எந்த சான்றும் இல்லை.

நிலத்துக்கு அடியிலும் கடல் நீருக்கு அடியிலும் என்னவெல்லாம் இருக்கிறது என்பதை செயற்கைக்கோளில் இருந்தபடியே படமெடுக்கும் தொழில்நுட்பம் வந்து பல ஆண்டுகள் ஆகின்றன. இப்போதுவரை கடலுக்கடியில் இருப்பதாகக் கூறப்படும் அந்தக் குமரிக் கண்டத்தின் படம் ஏதும் தென்னிந்திய கடல்பரப்பை ஒட்டிக் கிடைக்கவில்லை.

ஒருவேளை இனி அப்படி ஒரு நிலப்பரப்பு கண்டுபிடிக்கப்பட்டாலும், தமிழ் இலக்கியங்களில் கூறப்பட்டிருப்பதைப் போல மனித நாகரிகத்தின் வரலாற்றுக் காலத்துக்கு பிறகு கடலில் மூழ்கியதாக அது இருக்க வாய்ப்பில்லை. மொரிஷியா போல பல லட்சம் முதல் சில கோடி ஆண்டுகளுக்கு முந்தையதாகவே அது இருக்கும்.







இலங்கையில் எந்த ஒரு இடத்திலும் பண்டைய கால கற்தூண்கள் அல்லது கருங்கல் தொல்பொருள் சின்னங்கள் காணப் பட்டால், அல்லது அகழ்வாராய்ச்சியின் போது கிடைத்தால் அவற்றை பௌத்த சம யத்திற்கு உரியவை எனக் கூறும் வழக்கமே இருந்து வருகிறது. அது போலவே குருந் தூர் மலையில் கிடைக்கப்பெற்ற இந்த சிவலிங்க வடிவமும் வழமை போல பௌத்த தூபிக்குரியது எனக் கூறப்பட்டுள்ளது. இதன் மேற்பகுதி எட்டுப் பட்டையாகவும், அடிப்பகுதி சதுர வடிவமாகவும் உள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.





என்.கே.எஸ். திருச்செல்வம்
வரலாற்று ஆய்வாளர்

# குருந்தனூர் மலையில் புதைந்துள்ள வரலாறு

**வ**டமாகாணத்தில் அமைந்துள்ள முல்லைத்தீவு மாவட்டத்தில் நெடுங்கேணி என்னுமிடம் உள்ளது. இங்கிருந்து வடகிழக்குப் பக்கத்தில் சுமார் 14 கி. மீ. தூரத்தில் தண்ணிமுறிப்பு குளம் அமைந்துள்ளது. இக்குளத்தின் வடக்குப் பக்கத்தில் காணப்படுவதே குருந்தூர் மலையாகும். இது குருந்தனூர் மலை எனவும் அழைக்கப்படுகிறது.

இம்மலையில் சுமார் 25 ஏக்கர் பரப்பள வில் பண்டைய கட்டிட இடிபாடுகள் காணப்படுகின்றன. இவ்விடத்தில் ஆதி ஐயனார் குடிகொண்டிருப்பதாக நம் பும்இந்துக்கள் பல தசாப்தங்களாக ஆதி ஐயனாருக்கு படையல் வைத்து பூசை கள் செய்து வழிபட்டு வருகின்றனர்.

அண்மைக் காலத்தில் இப்பகுதிக்கு வந்த பௌத்த பிக்குகள் சிலர் இப்பகுதியில் இருக்கும் இடிபாடுகள் பௌத்த வழிபாட்டுத் தலத்திற்கு உரியவை எனக் கூறி வருகின்றனர். இந்நிலையில் கடந்த மாதம் குருந்தூர் மலையில் அமைச்சர் ஒருவர் மற்றும் அவரின் உதவியாளர்கள் ஆகியோர் ஒன்று கூடி புத்தக பகவானுக்கு பூசை ஒன்றை செய்துள்ளனர். பின்பு அதன் தொடர்ச் சியாக தொல்பொருள் அகழ்வாராச்சிகள் நடைபெற்றன.

மலையின் உச்சிப் பகுதியில் பௌத்த தூபியின் இடிபாடுகள் எனக் கருதப்பட்ட இடத்தில் அகழ்வாராச்சி நடைபெற்றது. இதன்போது நேற்று இவ்விடத்தில் சிவலிங்கம் போன்ற அமைப்புடன் எட்டு வரிகளைக் கொண்ட ஒரு உருளை வடிவமான தொல்பொருள் சின்னம் வெளிப்பட்டது. இது பௌத்த தூபிக்குரிய "யூப்ப கல" என சிங்கள வலைப் பத்திரிகையில் செய்தி வெளி வந்தது.

சாதாரணமாக இலங்கையில் எந்த ஒரு இடத்திலும் பண்டைய கால கற்தூண்கள் அல்லது கருங்கல் தொல்பொருள் சின்னங்கள் காணப்பட்டால், அல்லது அகழ்வாராய்ச்சியின் போது கிடைத்தால் அவற்றை பௌத்த சமயத்திற்கு உரியவை எனக் கூறும் வழக்கமே இருந்து வருகிறது. அது போலவே குருந்தூர் மலையில் கிடைக்கப்பெற்ற இந்த சிவலிங்க வடிவமும் வழமை போல பௌத்த தூபிக்குரியது எனக் கூறப் பட்டுள்ளது. இதன் மேற்பகுதி எட்டுப் பட்டையாகவும், அடிப்பகுதி சதுர வடிவமாகவும் உள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

உண்மையில் இது சிவலிங்கமா? அல்லது யூப்ப கல எனும் யூப்ப ஸ்தம்பமா? இது சிவலிங்கம் தான். அதுவும் பல்லவர் கால கட்டிடக் கலை மரபைக் கொண்ட எட்டுப் பட்டை தாராலிங்கம். தாராலிங்க வடிவங்களில் இரண்டாவது வகையைச் சேர்ந்தது.

இதை உறுதிப் படுத்திக் கொள்வதற்கு முதலில் தாரா லிங்கம் என்றால் என்ன? யூப்ப ஸ்தம்பம் என்றால் என்ன? இவை பற்றி அறிஞர்கள் என்ன கூறியுள்ளார்கள் என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். அதற்கு முன்பாக குருந்தனூர் மலையில் இருந்த சிவ வழிபாடு பற்றியும், அதன் வரலாறு பற்றியும் தெரிந்து கொள்ளலாம்.

குருந்தனூர் மலையில் மிகப்பெரிய சிவாலயத்தின் சின்னங்கள் இருந்தது பற்றிய எச்.சி.பி.பெல் அவர்களின் ஆய்வுக் குறிப்பு -

குருந்தூர் மலைப் பகுதியில் சுமார் 115 வருடங்களுக்கு முன்பு ஆங்கிலேய ஆய்வாளர் எச்.சி.பி.பெல் அவர்கள் ஆய்வுகள் மேற்கொண்டு அவை பற்றிய விபரங்களை 1905 ஆம்ஆண்டு இலங்கைத் தொல்பொருள் திணைக்களத்தின் "Archaelogical Survey of Ceylon-Annual Report-1905 எனும் அறிக்கையில் ஆவணப் படுத்தியுள்ளார். அவ்வறிக்கை பின்வருமாறு:

குருந்தன் குளத்தின் மேற்குப் பக்கத்தில், குருந்தூர் மலையின் தெற்குப்பக்க சரிவில் குருந்தன் ஊர் எனும் பட்டினம் புதைந்து கிடக்கிறது. இப்பகுதி முழுவதும் அடர்ந்த காடாகக் காணப்படும் அதேவேளை, இப்பகுதியில் இதுவரை அகழ் வாராய்ச்சிகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் தெரிகிறது.

இவ்விடத்தில் மூன்று பக்கங்களும் மதிற் சுவரினாலும், ஒரு பக்கம் குளத்தின் அணையாலும் சூழப்பட்ட சுமார் 200 ஏக்கர் பரப்பளவில் கட்டிட இடிபாடுகள் காணப்படுகின்றன. இங்கு கற்தூண்களும், ஏராளமான சிறிய கட்டிடங்களின் சிதைவுகளும், சில பெரிய கட்டிடங்களின் சிதைவுகளும் காணப்படுகின்றன.

இவற்றில் சிறிய தூபி ஒன்று உள்ளது. இதன் அருகில் பல கற் தூண்களும், அதிகளவில் சிதைவடைந்த நந்தி ஒன்றும் காணப்படுகிறது. இது அநேகமாக ஒரு சைவக் கோயிலாக இருக்க வேண்டும். இவ்விடத்தில் மூன்று அடி விட்டமுள்ள பெரிய ஆவுடையார் ஒன்று காணப்படுகிறது. இதன் நடுவில் ஒரு அடி விட்டமுள்ள குழி உள்ளது. இதன் அருகில் செங்கல்லில் கட்டப்பட்ட 4 அடி 6 அங்குலம்அகலமுள்ள கிணறு காணப்படுகிறது. 25 அடி ஆழமுள்ள இக்கிணற்றில் 20 அடி வரை செங்கல் கட்டுமானமும், அதன் கீழே 5 அடிக்கு பாறையில் செதுக்கப் பட்டும் கிணறு அமைக்கப்பட்டுள்ளது.

இங்கு கல்லில் செதுக்கப்பட்ட ஒரு சிற்பம் உள்ளது. 2 அடி 6 அங்குல உயரம், ஒரு அடி 9 அங்குல அகலம்கொண்ட இது உட்கார்ந்து வணங்கிய வண்ணம் காணப்படும் மனித உருவமாகும். இங்கு பல நாக காவற்கற்களும் காணப்படுகின்றன. இங்குள்ள செங்கல் கட்டிடம் ஒரு இந்துக் கோயிலாகும். இது இடிந்து விழுந்து மேடாகக் காணப்படுகிறது. மொத்தத்தில் இது பௌத்த, இந்து சிதைவுகளைக் கொண்ட பிரதேசமாகும்.

எச்.சி.பி.பெல் அவர்களின் மேற்குறிப்பிட்ட ஆய்வறிக்கையின்படி குருந்தூர்மலையில் பெரிய அளவிலான ஆவுடையார் மற்றும் நந்தி சிலை ஆகியவை காணப்பட்டுள்ளன. இதன் மூலம் இங்கு ஓர் பெரிய சிவன் கோயிலும், அதன் அருகில் தீர்த்தக் கேணியும் இருந்துள்ளன என்பது உறுதியாகிறது. இச்சிவன் கோயில் சோழர் காலத்தில் அல்லது அதற்கு முன்பு கட்டப்பட்டதாக இருக்க வேண்டும்.

வன்னி மேற்குப் பகுதியில் உள்ள வவுனிக்குளம் எல்லாள மன்னனால் கட்டப்பட்டிருக்கலாம் என ஹென்றி பாக்கர் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். இதன் மூலம் வன்னிப் பகுதியில் எல்லாளனின் பணிகள் நடைபெற்றுள்ளன எனக் கூறலாம். எனவே வன்னி கிழக்குப் பகுதியில் உள்ள கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த குருந்தனூர் மலையிலும் தமிழ் மன்னன் எல்லாளனின் காலத்தில் கோயில்கள் அமைக்கப்பட்டிருக்கலாம்.

குருந்தனூர் மலையில் எச்.சி.பி.பெல் கண்ட ஆவுடை யார் 10 அடி சுற்றளவைக் கொண்டதாகக் காணப்பட்டுள்ளது. இலங்கையில் திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம், முன்னேஸ்வரம், நகுலேஸ்வரம் போன்ற பெரிய சிவாலயங்களிலேயே இத்தனை பெரிய சிவலிங்கங்கள் காணப்படுகின்றன. எனவே குருந்தனூர் மலையிலும் இவை போன்ற ஓர் சிவாலயம் இருந்திருக்கும் என எண்ணக் கூடியதாக உள்ளது.

தற்போது வெளிப்பட்ட தாரா லிங்கத்தின் விட்டமும், 1905 ஆம் ஆண்டு எச்.சி.பி.பெல் அவர்கள் கண்ட ஆவுடையாரின் நடுப்பகுதியில் உள்ள குழியின் அளவும் ஒரே அளவாக இருப்பதால் தற்போது வெளிப்பட்ட லிங்கம் எச்.சி. பி.பெல் அவர்கள் குறிப்பிட்ட ஆவுடையாருக் குரியதாகக் கூட இருக்கலாம்.

குருந்தனூர் மலையில் காணப்பட்ட மிகப்பெரிய ஆவுடையாரும், தலை உடைந்த நந்தியும் இப்போது எங்கே உள்ளதுஎனத் தெரியவில்லை. எச்.சி.பி.பெல் அவர்களால் அப்போதே எடுக்கப்பட்டதா அல்லது இன்னும் மண்ணுக்குள் புதைந்து கிடக்கிறதா என்பதும் தெரியவில்லை. சிலவேளை தற்போது நடைபெறும் அகழ்வாய்வுகளின் போது கூட இவை வெளிப்படலாம்.

குருந்தனூர் மலையில் சிவன் கோயில் மற்றும் நாக கோயில் பற்றி ஜே.பி. லூயிஸ் அவர்களின் ஆய்வுக் குறிப்பு

குருந்தூர் மலைப் பகுதியில் 125 வருடங்களுக்கு முன்பு ஆய்வுகள் மேற்கொண்ட ஆங்கிலேய ஆய்வாளர் ஜே.பி. லூயிஸ் அவர்கள் 1895 ஆம் ஆண்டு தனது "Mannual of the Vanni Districts" எனும் நூலில் அவை பற்றிய விபரங்களை எழுதியுள்ளார்.

அந் நூலில் குருந்தனூர் மலையில் தலை உடைந்த நிலையில் ஒரு நந்தியின் சிலை இருந்ததாகவும், வணங்கிய நிலையில் ஒருவர் இருக்கும் சிற்பமும் இருந்ததாகவும், இவை தமிழரின் படையெடுப்பின் பின் கட்டப்பட்ட ஓர் இந்துக் கோயிலுக்குரிய சின்னங்கள் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். மேலும் இங்கு 5 தலை நாகத்தின் கற்சிலையுடன் கூடிய ஒரு பண்டைய கோயிலும் இருந்ததாகவும் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் மன்னர்களான மாகோன் மற்றும் ஜயபாகு ஆகியோரின் ஆட்சியில் முக்கிய தமிழர் கோட்டையாக விளங்கிய குருந்தனூர் மலை. பொ.ஆ. 1215 ல் கலிங்க மாகோன் மற்றும் ஜயபாகு ஆகிய தமிழ மன்னர்கள் இருவர் இந்தியாவில் இருந்து பெரும் படையுடன் வந்து, இலங்கையைக் கைப்பற்றி, 1215 முதல் 1255 வரையான 40 ஆண்டுகாலம் ஆட்சி செய்து வந்தனர். இவர்களது முக்கிய 7 கோட்டைகள் அமைக்கப்பட்ட இடங்கள் பற்றி சூளவம்சம் குறிப்பிடுகிறது. இவற்றில் குருந்தனூர் மலையும் ஒன்றாகும். இதுபற்றி பூஜாவலிய, ராஜாவலிய, நிக்காய சங்கிரஹய ஆகிய நூல்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கலிங்க மாகோன் இலங்கையில் வீரசைவ மரபைப் பரப்பிய மன்னனாவான். எனவே அவனின் முக்கிய கோட்டையாக விளங்கிய குருந்தனூர் மலைப் பகுதியில் வீரசைவம் செல்வாக்குப் பெற்று விளங்கி யிருக்கும் என்பதில் ஐயமில்லை. (மிகுதி நாளை...)

## குண்டுத் தாக்குதல்:

# ‘பிரதான சூத்திரதாரிகள் இன்னும் சிக்கவில்லை’



கொழும்பு,பெப்.13

ஈஸ்டர் தாக்குதலின் பிரதான சூத்திரதாரிகளை கண்டுபிடிக்க அரசாங்கம் எந்த முயற்சியையும் மேற்கொள்ளவில்லை என ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் நிரோஷன் பெரேரா குற்றம்சாட்டியுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குற்றம்சாட்டினார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

“ஈஸ்டர் தாக்குதல் விசாரணையில் நியாயம் கிடைக்காவிட்டால் சர்வதேச நீதிமன்றத்துக்கு செல்ல வேண்டிவரும் என கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

இந்தத் தாக்குதலுடன் தொடர்புபட்டவர்களுக்கு எதிராக வழக்குத் தொடுக்க அனைத்து ஆவணங்களையும் சட்டமா அதிபரிடம் கையளித்திருப்பதாக பொலிஸ் துறைக்குப் பொறுப்பான அமைச்சர் சரத் வீரசேகர சபையில் தெரிவித்திருந்தார்.

ஆனால், சட்டமா அதிபர், பொலிஸ்மா அதிபருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி, வழக்கு தொடுக்கும் அளவுக்கு முறையான விசாரணை இடம்பெறவில்லை. அதனால் முறையான விசாரணை ஒன்றை மேற்கொள்ளுமாறு அந்த ஆவணங்களை அனுப்பி உள்ளார்.

அதனால் ஈஸ்டர் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுப்பதாக அரசாங்கம் ஆட்சிக்கு வரும்போது தெரிவித்திருந்தது. ஒருவருடமாகியும் அதுதொடர்பான விசாரணையைக்கூட முறையாக நடத்த முடியாத அளவுக்கு சென்றிருக்கின்றது.

ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அரச தரப்பினர் எமது மதத்தலைவர்களிடம் இதுதொடர்பில் பல்வேறு தகவல்களை தெரிவிக்கின்றபோதும், இந்த விசாரணையை மறைக்க இந்த அரசாங்கமும் முயற்சிக்கின்றதா? என்ற கேள்வி எமக்கு எழுகின்றது.

அதனால் இந்தத் தாக்குதலின் பிரதான சூத்திரதாரிகளை கண்டுபிடிக்க அரசாங்கத்திடம் எந்த முயற்சியும் இல்லை. குறைந்தபட்சம் இந்தியாவுக்கு தப்பிச்சென்றிருக்கும் சாரா என்ற பெண் தொடர்பாகவேனும் விசாரணை மேற்கொள்ள இவர்கள் முயற்சிப்பதில்லை.

மாறாக தாக்குதல் இடம்பெறாமல் தடுப்பதற்கு தவறினார்கள் என சில அரசியல் தலைவர்களை சிக்கவைக்க மிகவும் தேவையுடன் செயல்படுகின்றதை காணமுடிகின்றது.

எனவே ஈஸ்டர் தாக்குதலின் பிரதான சூத்திரதாரி, அதன் பின்னணியில் இருந்தவர்கள், அவர்களுக்கு அரசியல் ரீதியில் பாதுகாப்பு வழங்கியவர்கள் யார் என்ற விடயங்களை வெளிப்படுத்தவேண்டும்.

இதுதொடர்பான உரிய விசாரணை மேற்கொள்ளாமல் அரசாங்கம் மறைக்க முயற்சித்தால், அது பெரும் பிரச்சினைக்குக் கொண்டுசெல்லும்“ எனக் குறிப்பிட்டுள்ளார். (எ)

## ஈஸ்டர் தாக்குதல்:

# ஆணைக்குழு அறிக்கையை பகிரங்கப்படுத்த வேண்டும்

### மறைக்கப்படுவதில் சந்தேகம் என்கிறது ஜே.வி.பி.



கொழும்பு,பெப்.13

**2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற குண்டுத் தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை நாட்டு மக்களுக்குப் பகிரங்கப்படுத்தப்பட வேண்டும். அதிலுள்ள விடயங்களை அறிந்து கொள்வதற்கான உரிமை சகலருக்கும் உண்டு. இந்த அறிக்கை ஜனாதிபதியால் தொடர்ந்தும் மறைக்கப்படுமானால் அது பாரிய சந்தேகத்தை ஏற்படுத்தும் என்று மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.**

ராஜகிரியவிலுள்ள மக்கள் விடுதலை முன்னணி தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை நாட்டு மக்களுக்குப் பகிரங்கப்படுத்தப்பட வேண்டும்.

அதிலுள்ள விடயங்களை அறிந்து கொள்வதற்கான உரிமை சகலருக்கும் உள்ளது. கடந்த 8 ஆம் திகதி பாராளுமன்றத்தில் இடம்பெற்ற கட்சித் தலைவர் கூட்டத்திலும் இதனை வழியுறுத்தினோம். இது மாத்திரமின்றி அரசியல் பழிவாங்கல் தொடர்பான விசாரணை அறிக்கையும் பகிரங்கப்படுத்தப்பட வேண்டும்.

ஆனால், அரசாங்கம் இந்த விடயத்தில் மௌனமாக இருக்கிறது. இதில் ஒரு இலட்சத்துக்கும் அதிக பக்கங்கள் காணப்படுவதால் அச்சிடுவதற்கு சிரமம் எனில் அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளங்களிலாவது பதிவேற்ற முடியும்.

இதற்கான எவ்வித நடவடிக்கையும் முன்னெடுக்கப்படாவிட்டால் இதனை அரசாங்கம் மறைக்கின்றதா? எந்த சந்தேகம் எழும். இதனை மறைத்து வைப்பதற்கான உரிமை ஜனாதிபதிக்கோ அரசாங்கத்துக்கோ இல்லை.

உண்மையான அறிக்கையிலுள்ள பக்கங்கள் நீக்கப்படக்கூடிய அபாயம் தற்போது காணப்படுகிறது. எனவே இந்த அறிக்கையை ஜனாதிபதியிடம் கையளிக்கும் போது அதனை ஆவண பாதுகாப்பு சபைக்கும் வழங்குவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும். இதனை ஒரு சட்டமாக உருவாக்கினாலும் அது வரவேற்கத்தக்க விடயமாகும்.

கொரோனா தொற்றால் உயிரிழப்போரின் சடலங்கள் தொடர்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கூறிய விடயம் பொதுஜன பெரமுனவினரைத் தவிர ஏனைய அனைவருக்கும் ஒரே அர்த்தத்திலேயே புரிந்துள்ளது.

பொதுஜன பெரமுனவினருக்கு மாத்திரம் அதன் அர்த்தம் வேறொன்றாகப் புரிகிறது என்றால் அவர்கள் வேறு கிரகத்தை சேர்ந்தவர்களாகவே இருக்க வேண்டும். அத்தோடு பிரதமராயினும் தீர்மானமொன்றை எடுப்பதில் எத்தகைய சிக்கல் காணப்படுகிறது, அவருக்கு எவ்வாறான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன என்பது தற்போது தெளிவாகிறது- என்றார். (எ)

# 1000 ரூபா அதிகரிப்பை எம்மால் ஏற்கமுடியாது

### சிறுதோட்ட உரிமையாளர்கள் சங்கம் மறுப்பு

கொழும்பு,பெப்.13

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான நாளாந்த சம்பளத்தை 1000 ரூபாயாக அதிகரிக்க சம்பள நிர்ணய சபை மேற்கொண்ட தீர்மானத்தை ஏற்றுக் கொள்ள முடியாது என சிறுதோட்ட உரிமையாளர்கள் சங்கமும் தனியார் தேயிலை தொழிற்சாலை உரிமையாளர்கள் சங்கமும் அறிவித்துள்ளன.

அண்மையில் கூடிய சம்பள நிர்ணய சபை, இறப்பர் மற்றும் தேயிலை துறைசார்ந்த பெருந்தோட்டத்துறை தொழிலாளர்களது அடிப்படை சம்பளத்தை 900 ரூபாயாகவும் வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவை 100 ரூபாயாகவும் அதிகரிப்பதற்கான தீர்மானத்தை நிறைவேற்றியது.

இந்நிலையில், சம்பள உயர்வு அதிகரிக்கப்படுவதானது, சிறுதோட்ட உற்பத்தியாளர்களையும் தனியார் தேயிலை தொழிற்சாலைகளை நடத்துகின்றவர்களையும் பெரிதும் பாதிக்கும் என்று இந்த சங்கங்கள் தெரிவித்துள்ளன. எனவே 1000 ரூபா அதிகரிப்பை எம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் அவர்கள் அறிவித்துள்ளனர்.

இதேவேளை, சம்பள நிர்ணய சபையின் இந்தத் தீர்மானத்துக்கான ஆட்சேபனையை முன்வைக்கவிருப்பதாக பெருந்தோட்ட நிறுவனங்களது ஒன்றியமும் தெரிவித்துள்ளது. (எ)



# களனி பல்கலைக்கழக மாணவர் ஆர்ப்பாட்டம்

கொழும்பு,பெப்.13

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து களனி பல்கலைக்கழகத்தின் மாணவர்கள் நேற்றுமுன்தினம் கொழும்பில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (எ)

# கோப் குழுவின் பரிந்துரைகளை செயல்படுத்த கடமைப்பட்டுள்ளேன்



### அமைச்சர் நாமல் தெரிவிப்பு

கொழும்பு,பெப்.13

கோப் குழுவின் பரிந்துரைகளை செயல்படுத்த நான் கடமைப்பட்டுள்ளேன் என விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

விளையாட்டுத்துறை அமைச்சர் என்ற வகையில் கோப்குழுவின் பரிந்துரைகளுக்கு அமைய தான் செயல்படுவதாகவும், இதுதொடர்பில் ஒருபோதும் அச்சமடைய வேண்டாம் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அத்துடன் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தை கோப் குழு மீண்டும் விசாரணைக்கு அழைத்துள்ளதாக அதன் தலைவர் பேராசிரியர் சரித்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் 2017, 2018 ஆம் ஆண்டு நிதி ஆண்டுக்கான கணக்காய்வாளர் அறிக்கை, மற்றும் அதன் செயல் திறன் பற்றியும் ஆராயப்படவுள்ளன- என்றார். (எ)

# எவரையாவது தீர்த்துக்கட்ட துரோகிப்பட்டம் கொடுப்பர்

## எனக்கும் பல தடவைகள் அந்தப்பட்டம் வழங்கப்பட்டது என்று பல்வேறு சர்ச்சைகளுக்கு பதிலளித்தார் சுமந்திரன்



கொழும்பு,பெப்.13

**காட்டிக்கொடுப்பு, துரோகம் என்கின்ற சொற்கள் தமிழ் அரசியலில் கனதி நிறைந்த சொற்கள். அதற்குப் பல அர்த்தங்கள் உள்ளன. எவரையாவது தீர்த்துக் கட்ட வேண்டுமாக இருந்தால் முதலில் அவருக்கு துரோகிப் பட்டம் கொடுப்பார்கள். அது அண்மைக்காலமாக இல்லாமல் இருந்தது. எனக்கும் பல தடவைகள் அந்தப்பட்டம் வழங்கப்பட்டது எனத் தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர், பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், பல்லாயிரக்கணக்கான மக்களின் பேராதரவுடன் நடைபெற்று முடிந்த பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான போராட்டம் தொடர்பில் முன்வைக்கப்படும் பல்வேறு சர்ச்சைக்குரிய கருத்துக்கள் தொடர்பிலும் விளக்கமளித்துள்ளார்.**

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு விளக்கமளித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு: “பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான பேரணியை ஏற்பாடு செய்யும் போது எங்களிடம் 10 விடயங்களை சுட்டிக்காட்டி, இவற்கை வலியுறுத்தியே பேரணியை முன்னெடுக்கப்போவதாக தெரிவித்தனர்.

இவ்வாறான நிலையில் ஐந்து நாள்கள் தொடர்ந்தும் பேரணியை முன்னெடுத்துச் சென்று, ஐந்தாவது நாளில் புதிதாக விடயங்களை பிரகடனமாக தெரிவிப்பது என்பது மக்களுக்கு நேர்மையாக நடந்து கொள்ளுகின்ற ஒரு விடயம் அல்ல.

பிரகடனம் என்று சொல்லி படிக்கப் பட்டதிலே நல்ல விடயங்களும் இருக்கலாம் அதைப்பற்றி நான் பேசவில்லை. அது தமிழ் மக்களுக்கு உரிய விடயங்களாக இருக்கலாம். இல்லாமலும் இருக்கலாம் அதைப் பற்றியும் நான் பேசவில்லை.

ஆனால், இந்த பத்து விடயங்கள் தொடர்பில் சொல்லி வாருங்கள் என அழைத்து விட்டு, மக்களும் சேர்ந்து நடந்த பின்னர் வேறு விடயங்களை இதுதான் பிரகடனம் என சொல்லுவது முழுக்க முழுக்க மக்களை ஏமாற்றுகின்ற ஒரு செயல்.

நான் துரோகம் என்ற சொல்லை ஒருபோதும் பயன்படுத்துவது இல்லை. நான் மக்களை ஏமாற்றுகின்ற செயல் என்று சொல்லுகின்றேன். இந்தத் துரோகம் என்ற சொல்லும், இன்னுமொருவர் சொல்லியிருந்தார் சுமந்திரன் இந்த போராட்டத்தைக் காட்டிக்கொடுத்து விட்டார் என்று.

காட்டிக்கொடுப்பு, துரோகம் என்கின்ற சொற்கள் தமிழ் அரசியலில் கனதி நிறைந்த சொற்கள். அதற்குப் பல அர்த்தங்கள் உள்ளன. எவரையாவது தீர்த்துக் கட்ட வேண்டுமாக இருந்தால் முதலில் அவருக்கு துரோகிப் பட்டம் கொடுப்பார்கள். அது அண்மைக்காலமாக இல்லாமல் இருந்தது. எனக்கும் பல தடவைகள் அந்தப் பட்டம் வழங்கப்பட்டது.

இந்நிலையில் எனக்கு வழங்கப்பட்ட விஷேட பாதுகாப்பு நீக்கப்படுகின்ற தருவாயில், திரும்பவும் காட்டிக்கொடுப்பு, துரோகம் என்கின்ற சொற்கள் பயன்படுத்தப்படுவது ஒன்றோடு ஒன்று தொடர்பில்லாமல் செய்யப்படுவதாக நான் நினைக்கவில்லை. ஆகவே சரத் வீரசேகரவுக்கும் இந்த சொற்களைப் பயன்படுத்துபவர்களுக்கும் நிறையவே தொடர்பு இருப்பதாக நான் சந்தேகிக்கின்றேன்.

அத்துடன், பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான பேரணியின் ஆரம்பத்தில் நான் வரவேண்டும் என வலியுறுத்திக்கேட்டுக் கொண்டார்கள். ஏற்பாட்டார்கள் சாணக்கியனுடன் பேசும் போதெல்லாம் இதனை வலியுறுத்தினர்.

இதன்காரணமாக நான் மூன்று முக்கிய வழக்குகளை வாதாடும் பொறுப்பை சயந்தனிடம் ஒப்படைத்து விட்டு சென்றேன். நான் செல்லும் வரை அனைவரும் வாகனங்களில் இருந்து இறங்காமல் எனக்காகக் காத்திருந்தார்கள்.

இரண்டாவது, மூன்றாவது நாள்களில் இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்னிற்கு செல்லதாக கூறுபவர்கள், முதல் நாளில் நாங்கள் முன்னிற்கு சென்றமை தொடர்பில் எதுவும் பேசவில்லை.

முதல் நாளில் தடைகளை உடைக்க தேவைப்பட்டவர்கள் பின்னர் அவர்களுக்கு தேவைப்படவில்லை“ என சுமந்திரன் கவலை வெளியிட்டுள்ளார். (எ)

# மன்னாரில் 220 பேருக்கு கொரோனா

## வைத்தியர் வினோதன் தகவல்

மன்னார்,பெப்.13

மன்னார் மாவட்டத்தில் தற்போது வரை 220 கொரோனா தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதோடு, மாவட்டத்தில் 3 கொரோனா மரண சம்பவங்கள் பதிவாகியுள்ளன என மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் டி.வினோதன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்றுக் காலை இடம்பெற்ற ஊடகச் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

மன்னார் மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் மேலும் மூன்று கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.இவர்களில் ஒருவர் 73 வயதுடைய வயோதிப பெண். இந்தப் பெண் நீண்ட காலமாக சுகவீனம் அடைந்திருந்த நிலையில் முசலி பிரதேசத்தில் உள்ள அவரது வீட்டில் சுயதனிமைப் படுத்தப்பட்டிருந்தார். இந்த வயோதிபப் பெண்ணின் நெருங்கிய உறவினர்கள் பலருக்கு அண்மையில் கொரோனா தொற்று ஏற்பட்டிருந்தது.

இந்நிலையில் இந்தப் பெண் கடந்த புதன்கிழமை அதிகாலை திடீர் என முசலியில் உள்ள அவரது வீட்டில் மரணமடைந்தார். இவரது உடல் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டு பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன்போது அந்தப் பெண் கொரோனா தொற்றால் உயிரிழந்தமை உறுதி செய்யப்பட்டுள்ளது. மன்னார் மாவட்டத்தில் தற்போது வரை கொரோனா தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மூன்றாக அதிகரித்துள்ளது.

மேலும் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களில் ஒருவர் மன்னாரில் உள்ள ஆடைத் தொழிற்சாலையில் கடமையாற்றுகின்றவராகவும், மற்றையவர் மன்னார் எருக்கலம் பிட்டி கிராமத்தைச் சேர்ந்தவர் எனவும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்களுடன் சேர்த்து தற்போது வரை 220 பேர் மன்னார் மாவட்டத்தில் கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதே வேளை மன்னார் மாவட்டத்தில் இதுவரை 9677 பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும் இந்த மாதத்தின் இறுதி வாரம் அல்லது மார்ச் மாதத்தின் முதல் வாரத்தில் இருந்து 30 வயது தொடக்கம் 60 வயதுக்குட்பட்ட சகல தொழில் மேற்கொள்பவர்களுக்கும், 60 வயதுக்கு மேற்பட்ட மக்களுக்கும் கொரோனா தடுப்பூசி செலுத்தப்படவுள்ளது. அதற்கான நடவடிக்கைகள் மன்னார் மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இலங்கையில் சுகாதாரத் துறையினருக்கு ஏற்கனவே கொரோனா தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன.தடுப்பூசி செலுத்தப்பட்ட எவருக்கும் ஒவ்வாமை அல்லது பாரதூர மான பக்க விளைவு ஏற்படவில்லை.

ஆகவே பொது மக்களுக்கும் உத்தியோகத்தர்களுக்கும் இந்த ஊசியை செலுத்துகின்ற போது அவர்கள் எவ்வித அச்சமும் இன்றி விரைவாக பெற்றுக் கொள்ள வேண்டும். அவ்வாறு விரைவாகப் பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பத்தில் அவர்கள் சார்ந்த நோய்வாய்ப்பட்ட அல்லது வயோதிபர்கள் உயிரிழப்பதை தவிர்த்துக்கொள்ள முடியும்- என்றார். (எ)

# ஒழுக்கமற்ற இராணுவத்தினருக்கு எதிராக இனிமேல் கடும் ஒழுக்காற்று நடவடிக்கை

## இராணுவப் பேச்சாளர் எச்சரிக்கை



கொழும்பு,பெப்.13

இராணுவச் சீருடைகளுடன் இருக்கும் சிலருக்கும் வேறு சில நபர்களுக்குமிடையில் முரண்பாடுகள் இடம்பெறுவதைப் போன்று சமூக வலைத்தளங்களில் வெளியான காணொலி தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு ஒழுக்கமற்று செயல்படுகின்ற இராணுவத்தினருக்கு எதிராக இனிமேல் கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் நிலாந்த பிரேமரத்ன எச்சரித்துள்ளார்.

இதுதொடர்பில்அவர்மேலும் தெரிவித்தவை வருமாறு:

இராணுவச் சீருடைகளுடன் உள்ள சிலருக்கும் வேறு சில நபர்களுக்குமிடையில் முரண்பாடுகள் இடம்பெறுவதைப் போன்று சமூக வலைத்தளங்களில் காணொலியொன்று பகிரப்பட்டு வருகிறது.

இந்தக் காணொலி மற்றும் சம்பவம் தொடர்பில் இராணுவம் துரித விசாரணைகளை முன்னெடுத்துள்ளது.

ஒழுக்கமான இராணுவத்தில் உள்ள இராணுவ அதிகாரிகள் அல்லது சிப்பாய்களால் ஒழுக்கமற்ற வகையில் முன்னெடுக்கப்படுகின்ற இவ்வாறான செயல்பாடுகளுக்கு ஒருபோதும் அனுமதியளிக்க முடியாது. இவ்வாறான நபர்களுக்கு எதிராக கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்தக் காணொலியில் காணப்படுகின்றதைப்போல இரு தரப்பினருக்குமிடையில் முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இதற்கான காரணம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பான முழுமையான விசாரணைகள் இராணுவத்தினரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.இதற்கமைய இந்த நபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது- என்றார். (எ)




# பி.பி.சி. செய்திக்கு சீனாவில் தடை!

லண்டன், பெப். 13

சீனாவின் தேசிய நலனுக்கு தீங்கு விளைவிக்கும் வகையில் செய்தி வெளியிட்டது என்று கூறி பி.பி.சி. செய்தி நிறுவனம் சீன அரசாங்கத்தால் தடை விதிக்கப் பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை, சீன அரசின் தலைமையின் கீழ் இயங்கும் வானொலியில், "பி.பி.சி. சமீபத்தில் வெளியிட்ட செய்திகள் சீனவின் ஒற்றுமைக்கும், தேசிய நலனுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் உள்ளது" என்று தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து சீனாவில் பி.பி.சி. சேவை நிறுத்தப்பட்டதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரி விக்கின்றன.

கொரோனா வைரஸை சீனா அரசு கையாண்ட விதம் குறித்து, சிறுபான்மையின மக்களுக்கு எதிராக சீனா எடுத்த நடவடிக்கைகள் குறித்து பி.பி.சி. சமீபத்தில் செய்தி வெளியிட்டிருந்தது. இதனைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கையை சீனா எடுத்தது.

இந்த நிலையில் இதுகுறித்து பி.பி.சி. கூறும்போது, "சீன அதிகாரிகளின் இந்த முடிவு எங்களை ஏமாற்றம் அடையச் செய்துள்ளது. பி.பி.சி. என்பது நம்பகத்தன் மையான செய்தி நிறுவனமாகும். உலகெங்கிலும் உள்ள செய்திகளை நியாயமாகவும் பாரபட்சமின்றி, எந்தவித ஆதரவும் இல்லாமல் வழங்கி வருகிறது" என்றார்.

சீனா இங்கிலாந்தின் முக்கிய கூட்டாளி ஆகும். இந்தத் தடை சீனா - இங்கிலாந்து இடையேயான உறவு மேலும் மோசமடைந்துள்ளதைக் காட்டுவதாக இங்கி லாந்து தெரிவித்துள்ளது. (ஐ)

# திரிபு வைரஸுக்கு எதிராக 10 ஆண்டு போரிட நேரும்!

## பிரபல ஆய்வாளர் எச்சரிக்கை



லண்டன், பெப். 13

**''பிரிட்டனில் பரவி வரும் திரிபடைந்த கொரோனா வைரஸ் உலகம் முழுவதும் பரவி பாதிப்பை ஏற் படுத்தும். இந்த வைரஸை எதிர்த்து 10 ஆண்டுகளுக் குப் போராட்டம் நடத்த வேண்டியிருக்கும்'' என்று பிரபல விஞ்ஞானி எச்சரித்துள்ளார்.**

சீனாவின் வுஹான் நகரில் இருந்து உலகம் முழுவதும் பரவிய கொரோனா வைரஸ் பரவி பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

தற்போது கொரோனா தடுப்பூசி கள் உலகம் முழுவதும் வழங்கப் பட்டு வருகிறது. இதனிடையே, பிரிட்டனின் கென்ட் நகரில், கொரோனா வைரஸ் திரிபடைந்து பெற்று பரவத் தொடங்கியது. இது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இதைத் தடுக்க புதிதாக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எனினும், தற்போது கண்டுபிடிக் கப்பட்ட தடுப்பூசிகளே, உருமாற் றம் பெற்ற கொரோனா பாதிப்புக் கும் வழங்கலாம் என்று கூறுகின்ற னர்.

இந்நிலையில், 'கொவிட்-19 ஜெனோமிக்ஸ் யூ.கே. கொன் சோர் டியம்' (COVID-19 Genomics UK Consortium) ஆராய்ச்சி மையத்தின் இயக்குநரும் விஞ்ஞானியுமான ஷாரோன் பீகொக் நேற்று கூறியதா வது:

உருமாற்றம் பெறும் கொரோனா வைரஸ் குறித்து தொடர்ந்து ஆராய்ச்சிகள் மேற்கொண்டு வருகிறோம். கென்ட் பகுதியில் முதலில் பரவிய உருமாற்றம் பெற்ற கொரோனா வைரஸ், உலகம் முழுவதும் பாதிப்பை ஏற்படுத்து வதற்கு வாய்ப்புகள் உள்ளன. இந்தச் சூழ்நிலையில், புதிய வகை கொரோ னாவை எதிர்த்து 10 ஆண்டுகளுக்கு போராட வேண்டியிருக்கும்.

வைரஸின் தாக்கம், நோய் உரு வாக்கும் தீவிரம் போன்றவற்றை சரி யாகக் கணித்து தடுப்பதற்கான தீர் வைக் கண்டுபிடித்துவிட்டால், நாம் பயப்பட வேண்டியிருக்காது. ஆனால், அதற்கு சில ஆண்டுகள் பிடிக்கும் என்று நினைக்கிறேன். என்னைப் பொறுத்த வரையில் 10 ஆண்டுகள் கூட ஆகலாம் - என் றார்.

இதற்கிடையில் சுய தனிமைப் படுத்திக் கொள்வது தொடர்பான விதிமுறைகளை மீறுபவர்களுக்கு 10 ஆயிரம் பவுண்ஸ் அபராதம், 10 ஆண்டு சிறை தண்டனை என்று பிரிட்டன் அரசு திட்டவட்டமாக அறிவித்துள்ளது. மேலும், வெளி நாடுகளில் இருந்து பிரிட்டன் வருப வர்களுக்கு பயண நிபந்தனைகள் கடுமையாக்கப்பட்டுள்ளன. (ஐ)

# பாபர் ஏவுகணையை சோதித்தது பாகிஸ்தான்




இஸ்லாமாபாத், பெப். 13

450 கி.மீ. தூரத்திலுள்ள இலக்கை அழிக்க வல்ல தும், அணு குண்டை காவிச் செல்லக்கூடியதுமான பாபர் ஏவுகணையை வெற்றிகரமாக பரிசோதித்தது பாகிஸ் தான்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை இந்த சோதனை நடத்தப்பட்டது. 3 வாரத்துக்குள் பாகிஸ்தான் நடத்தும் 3ஆவது ஏவுகணை சோதனை இதுவாகும்.

முன்னதாக அணு குண்டை காவிச் சென்று 290 கி.மீ. தூரத்திலுள்ள இலக்கை தாக்கும் கஜ்னாவி ஏவுகணை யையும், கண்டம் விட்டு கண்டம் பாயக்கூடிய 2750 கி. மீ. சென்று தாக்கக்கூடிய ஷாஹீன் - 3 என்ற ஏவுகணை யையும் பாகிஸ்தான் சோதித்திருந்தது குறிப்பிடத்தக் கது. (ஐ)

# தொற்றி குணமடைந்தோரையும் திரும்ப பீடிக்கிறது திரிபு வைரஸ்!



பாரிஸ், பெப். 13

கொரோனா தொற்றி குணமடைந்தவர்களை யும் திரிபு வைரஸ் திரும்பப் பீடிக்கிறது. எனவே, மக்கள் அவ தானமாக செயல்பட வேண்டும் என்று எச்சரிக்கப்பட் டுள்ளது.

"தென்னாபிரிக்கா, பிரேசில் ஆகிய நாடுகளில் இருந்து பரவிவரும் திரிபடைந்த வைரஸ் ஏற்கனவே கொரோனா தொற்றுக்கு இலக்காகிக் குணமடைந்த வர்களில் மறுபடியும் தொற்றுகின்றது. ஒருமுறை வைரஸ் தொற்றிய ஒருவரின் உடலில் உருவாகி இருக்கக் கூடிய நோய் எதிர்ப்பு சக்தியிடம் இருந்து தப்பிவிடும் திறனை அவை கொண்டுள்ளன", இந்த நிலை மிகவும் கவலைக்குரியது என்று பிரான்ஸின் சுகாதார அமைச்சர் ஒலிவியே வேரன் நேற்று தெரிவித்திருக்கிறார்.

பிரான்ஸின் வடகிழக்கே ஜேர்மனிய எல்லையோரம் அமைந்திருக்கின்ற மொஸெல்லே மாவட்டத்தில் புதிய வைரஸ் மிக வேகமாகப் பரவி வருகின்றது.

மாற்றமடைந்த வைரஸ் திரிபுகளின் பரவலால் பெரிய அளவில் பாதிக்கப்பட்ட மாவட்டமாக மொஸெல்லே உள்ளது. அங்கு சமீப நாட்களில் கவலை யளிக்கும் விதமாக 300 பேர் புதிய தென்னாபிரிக்க மற்றும் பிரேசில் வைரஸ் திரிபுகளின் தொற்றுக்கு உள் ளாகி இருக்கின்றனர் என்று சுகாதார அமைச்சர் தெரி வித்தார்.

பிரான்ஸில் தொற்று நிலவரம் ஒரு சீரான அளவில் உள்ள போதிலும் தொற்று நோயியல் நிபுணர்களி டையே புதிய வைரஸ் தொடர்பான அச்சம் நீடித்து வருகிறது. (ஐ)



# பைடனுக்கு மிரட்டல் விடுத்தவருக்கு மறியல்

வாஷிங்டன், பெப். 13

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனுக்குக் கொலை மிரட்டல் விடுத்த குற்றச்சாட்டில் வட கரோலினா மாகாணத்தை சேர்ந்த ஆண் ஒருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

27 வயதான டேவிட் கைல் ரீவ்ஸ் என்ற இந்த நபர் ஜோ பைடனைக் கொலை செய்யப்போகிறேன் என்று பலமுறை மிரட்டல் விடுத்தார் என்று சந்தேகிக்கப்படுகிறது.

ஜனவரி 28ஆம் திகதிக்கும் இம்மாதம் முதலாம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தில் அவர் வெள்ளை மாளிகைக்கு பலமுறை தொலைபேசி அழைப்பெடுத்து இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

தேடப்பட்டு வந்த இவர், கடந்த 5ஆம் திகதி கைது செய்யப்பட்டார். நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட இவ ருக்கு மனநல பரிசோதனை செய்யுமாறு நேற்றுமுன் தினம் உத்தரவிடப்பட்டது.

இந்த வழக்கில் சந்தேக நபர் மீதான குற்றம் நிரூபண மானால், அவருக்கு அதிகபட்சமாக 5 ஆண்டுகள் சிறைத் தண்டனையும் 2 இலட்சத்து 50 ஆயிரம் டொலர் அப ராதமும் விதிக்கப்படலாம் என்று தெரியவருகின்றது.

# 133 வாகனங்கள் மோதி விபத்து: 6 பேர் உயிரிழப்பு: 65 பேர் காயம்

நியூயோர்க், பெப். 13

அமெரிக்காவின் டெக்ஸாஸ் மாகாணத்தில் 133 வாகனங்கள் ஒரே நேரத்தில் அடுத்தடுத்து மோதி விபத்துக்குள் ளாகின. இதில், 6 பேர் உயிரிழந்தனர். 65 பேர் காயமடைந்தனர்.

டெக்ஸாஸ் மாகாணத்தில் போர்ட் வோர்த் நகரில் உள்ள பிரதான வீதியில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை அடுத்தடுத்து வாகனங்கள் மோதின. கொள்கலன் லொறிகள் முதல் சிறிய ரக கார்கள் வரை சுமார் 133 வாகனங்கள் இந்த விபத்தில் சிக்கின.

டெக்ஸாஸ் மாகாணத்தில் கடும் பனிப்பொழிவு நிலவி வரும் நிலை யில், அதிகாலையில் வீதிகளை மறைக்கும் அளவிற்கு பனிப் பொழிவு ஏற்பட்டதே விபத்திற்கு காரணமென முதல் கட்ட விசார ணைகளில் தெரியவந்துள்ளது.

விபத்தைத் தொடர்ந்து போர்ட் வோர்த் நகரில் உள்ள பிரதான வீதி மூடப்பட்டு விபத்தில் சிக்கிய வாக னங்கள் தீயணைப்பு வீரர்கள் துணையோடு அகற்றப்பட்டன.






# ஐ.பி.எல். ஏலத் தெரிவில் யாழ். வீரர் வியாஸ்காந்த்

சென்னை, பெப். 13

ஐ.பி.எல். தொடருக்கான வீரர்கள் ஏலத்தில் யாழ். வீரரான விஜயகாந்த் வியாஸ்காந்த் உள்ளிட்ட இலங்கை கிரிக்கெட் அணியின் 9 வீரர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஐ.பி.எல். தொடருக்கான வீரர்கள் ஏலம் எதிர்வரும் 18 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. இந் நிலையில், குறித்த ஏலத்தில் பங்கேற்கும் வீரர்கள் பட்டியலை ஐ.பி.எல். நிர்வாகம் நேற்று முன்தினம் இரவு வெளியிட்டது.

இந்தப் பட்டியலில் இலங்கை அணி சார்பாக குசல் பெரேரா, திசர பெரேரா, வனிந்து ஹசரங்க, துஷ்மந்த சமீர, தசுன் ஷானக மற்றும் இசுரு உதான ஆகியோருக்கான குறைந்தபட்ச ஏலத்தொகையாக 50 இலட்சம் இந்திய ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதேபோல, விஜயகாந்த் வியாஸ்காந்த், மஹீஸ் தீக்ஷன, கெவின் கொத்திகொட மற்றும் ஆகியோருக்கு குறைந்தபட்ச ஏலத்தொகையாக 20 இலட்சம் ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இம்முறை அதிகபட்சமாக ஐ.பி. எல். ஏலத்தில் ஹர்பஜன் சிங், கேதர் ஜாதவ், க்ளென் மெக்ஸ்வேல், ஸ்ரீவ் ஸ்மித், சகிப் அல் ஹசன், மொயீன் அலி, செம் பில்லிங்ஸ், லியம் ப்ளங்கட், ஜேசன் ரோய் மற்றும் மார்க் வூட் ஆகியோருக்கு 2 கோடி ரூபா குறைந்தபட்ச ஏலத்தொகையாக நிர்ணயிக் கப்பட்டுள்ளது.

ஐ.பி.எல். தொடருக்கான வீரர்கள் ஏலம் எதிர்வரும் 18 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு சென்னையில் ஆரம்பிக்கவுள்ளது. இதில் 164 இந்திய வீரர்கள், 128 வெளிநாட்டு வீரர்கள் மற்றும் 3 அங்கத்துவ நாட்டு வீரர்கள் என 292 வீரர்கள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அவுஸ்திரேலிய ஓப்பன்: முகுருஜா முன்னேற்றம்!

மெல்பர்ன், பெப். 13

அவுஸ்திரேலிய ஓப்பன் ரென்னிஸ் போட்டியில் செரீனா மற்றும் முகுருஜா 4ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளனர்.

கிராண்ட்ஸ்லம் அந்தஸ்து பெற்ற அவுஸ்திரேலிய ஓப்பன் ரென்னிஸ் மெல்பர்ன் நகரில் நடந்து வருகிறது.

இதில் நேற்று நடந்த பெண்கள் ஒற்றையர் பிரிவு 3ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் 23 கிராண்ட்ஸ்லம் பட்டம் வென்றவரான செரீனா வில்லியம்ஸ் (அமெரிக்கா)-அனஸ்தசியா பொடபோவா (ரஷ்யா) மோதினர்.

இதில், செரீனா 7-6 (7-5), 6-2 என்ற செற் கணக்கில் வென்று 4ஆவது சுற்றுக்குத் தகுதி பெற்றார்.

14ஆம் நிலை வீராங்கனையான ஸ்பெயினின் முகுருஜா 6-1, 6-1 என்ற நேர்செற் கணக்கில் ஜரினா தியாசை (கஜகஸ்தான்) தோறகடித்து 4ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

மற்ற ஆட்டங்களில் சபலென்கா (பெலாரஸ்), சு-வெய் (தைவான்) ஆகியோர் வென்றனர். (ஐ)



### தென்னாபிரிக்காவுடனான ரி-20

## ரிஷ்வான் அதிரடி சதம்: பாகிஸ்தான் வெற்றி




லாகூர், பெப். 13

முஹமது ரிஷ்வானின் அதிரடிச் சதத்தால் தென்னாபிரிக்கா அணியை 3 ஓட்டங்களால் வெற்றி கொண்டது பாகிஸ்தான் அணி.

பாகிஸ்தான் சென்றுள்ள தென்னாபிரிக்கா அணி தற்போது இருபது - 20 தொடரில் விளையாடி வருகின்றது.

நேற்றுமுன்தினம் இரவு நடந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடியது பாகிஸ்தான் அணி. முஹமது ரிஷ்வானும் அணித் தலைவர் பாபர் அஸாமும் தொடக்கம் கொடுத்தனர்.

ஒரு பந்தை மட்டுமே எதிர்கொண்ட அஸாம் ஓட்டம் எதுவுமின்றி ரன் அவுட் ஆனார். அடுத்து வந்த ஹைதர் அலி 21, ஹூசைன் தலட் 15, இப்திகார் அகமட் 4, குஷ்டில் ஷா 12, பஹீம் அஷ்ரப் 4 ஓட்டங்கள் என சொற்ப ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தனர்.

எனினும் தொடக்கம் கொடுத்த ரிஸ்வான் அதிரடியாக ஆடி, இருபது - 20 போட்டியில் தனது முதல் சதத்தை பூர்த்தி செய்தார். 64 பந்துகளை எதிர்கொண்ட ரஷ்வான் 6 பௌண்ட்ரிகள், 7 சிக்ஸர்களை விளாசி 104 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் குவித்தார்.

இதனால், பாகிஸ்தான் அணி 6 விக்கெட்கள் இழப்புக்கு 169 ஓட்டங்களை எடுத்தது.

தென்னாபிரிக்காவின் பந்துவீச்சில், அன்டில் பெலுவாயோ 2 விக்கெட்களையும், ப்ஜோன் போர்ரியுன், சிபாம்லா, சாம்சி ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு ஆடிய தென்னாபிரிக்க அணியின் தொடக்க இணை சிறப்பான ஆரம்பத்தை ஏற்படுத்தியது. மலன் 44 ஓட்டங்களையும், ஹென்றிக்ஸ் 54 ஓட்டங்களையும் பெற்றனர். ஆனால், பின்னர் வந்த வீரர்கள் சொற்ப ஓட்டங்களையே பெற்றனர்.

இதனால், 20 ஓவர்கள் நிறைவில் தென்னாபிரிக்க அணி 6 விக்கெட்கள் இழப்புக்கு 166 ஓட்டங்களைப் பெற்று 3 விக்கெட்களால் தோல்வியைத் தழுவியது.

பாகிஸ்தானின் பந்து வீச்சில், ஹரீஸ் ரவூப், உஸ்மான் ஹைதர் ஆகியோர் தலா 2 விக்கெட்களைக் கைப்பற்றினர்.

இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட தொடரில் பாகிஸ்தான் அணி 1-0 என்ற அடிப்படையில் முன்னிலை வகிக்கிறது. (ஐ)

## நடுவரிசை வீரர்கள் அபாரம்: மே.இ.தீவுகள் 409 ஓட்டங்கள்

டாக்கா, பெப். 13

நடுவரிசை துடுப்பாட்ட வீரர்களின் அபாரமான ஆட்டத்தால் மேற்கிந்தியத் தீவுகள் அணி முதல் இனிங்ஸில் சகல விக்கெட்களையும் இழந்து 409 ஓட்டங்களைப் பெற்றுள்ளனர்.

பங்களாதேஷ் சென்றுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணி 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகின்றது.

முதல் டெஸ்டை மேற்கிந்தியத் தீவுகள் கைப்பற்றியது. இந்நிலையில் இரண்டாவது டெஸ்ட் போட்டி நேற்று முன்தினம் ஆரம்பமானது.

முதல்நாள் ஆட்டம் முடிவில், 5 விக்கெட்கள் இழப்புக்கு 223 ஓட்டங்களை அந்த அணி பெற்றிருந்தது. பொன்னர் 74 ஓட்டங்களுடனும் டா சில்வா 22 ஓட்டங்களுடனும் நேற்று ஆட்டத்தைத் தொடர்ந்தனர்.

பொன்னர் 90 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அவரை தொடர்ந்து வந்தார் அல்ஷாரி ஜோசப். அவர் டா சில்வாவுடன் இணைந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர்.

டாசில்வா 92, ஜோசப் 82 ஓட்டங்களை பெற்றனர். பின்னர் வந்தவர்கள் சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, சகல விக்கெட்களையும் இழந்து 409 ஓட்டங்களைப் பெற்றது மேற்கிந்தியத் தீவுகள் அணி.

பங்களாதேஷின் பந்துவீச்சில், அபு ஜயெட், தஜூல் இஸ்லாம் ஆகியோர் தலா 4 விக்கெட்களை கைப்பற்றினர்.

பதிலுக்கு தனது முதல் இனிங்ஸில் துடுப்பெடுத்தாடி வருகின்றது பங்களாதேஷ் அணி. நேற்றைய நாள் ஆட்டம் முடிவில் அந்த அணி 4 விக்கெட்களை இழந்து 105 ஓட்டங்களைப் பெற்றது.

தொடக்க வீரரான தமீம் இக்பால் 44 ஓட்டங்களைப் பெற்றார். முஸ்பிகர் ரஹ்மான 27 ஓட்டங்களுடனும், முஹமட் மிதுன் 6 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

மேற்கிந்தியத் தீவுகளின் பந்துவீச்சில் கப்ரியால் 2 விக்கெட்களையும், கோன்வோல், அல்ஷார் ஜோசப் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றியுள்ளனர். (ஐ)





## யாழ். - கொழும்பு கடுகதி ரயிலில் மேலும் இரு வகுப்புக்கள் இணைப்பு

*யாழ்ப்பாணம்,பெப்.13*

யாழ்ப்பாணம் - கொழும்பு இடையே சேவையில் ஈடுபடும் குளிரூட்டப்பட்ட நகர்சேர் கடுகதி ரயிலில் புதிய வகுப்புக்கள் இணைக்கப்பட்ட சேவை கொழும்பிலிருந்து ஆரம்பித்து நேற்றுப் பிற்பகல் யாழ்ப்பாணத்தை வந்தடைந்தது.

இந்தச் சேவை தினமும் இடம்பெறும் என்று யாழ்ப்பாணம் ரயில் நிலைய பிரதான அதிபர் தி.பிரதீபன் தெரிவித்துள்ளார்.

கல்கிஸையிலிருந்து தினமும் அதிகாலை 5.10 மணிக்குப் புறப்படும் குளிரூட்டப்பட்ட நகர்சேர் ரயில் புறக்கோட்டை சென்று அதிகாலை 5.30 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு நண்பகல் 12.30 மணிக்கு யாழ்ப்பாணத்தை வந்தடையும்.

இதேவேளை, காங்கேசன் துறையிலிருந்து பிற்பகல் 1.15 மணிக்குப் புறப்படும் ரயில் யாழ்ப்பாணம் பிரதான ரயில் நிலையத்திலிருந்து பிற்பகல் 1.37 மணிக்கு கொழும்பு நோக்கிப் புறப்படும்.

இந்த ரயில் சேவையில் இதுவரை குளிரூட்டப்பட்ட வகுப்புக்களே காணப்பட்டன. எனினும் நேற்று முதல் இந்த சேவையில் இரண்டாம் வகுப்பில் 2 பெட்டிகளும் மற்றும் மூன்றாம் வகுப்பில் ஒரு பெட்டியுமாக 3 மேலதிக பெட்டிகள் இணைக்கப்பட்டு 7 பெட்டிகளில் பயணிகளுக்கு ஆசனங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

குளிரூட்டப்பட்ட முதலாம் வகுப்புக்கு ஆயிரத்து 700 ரூபாயும் இரண்டாம் வகுப்புக்கு 1,000 ரூபாயும், மூன்றாம் வகுப்புக்கு 700 ரூபாயும் கட்டணம் அறவிப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# ஞானசாரருக்கு எதிராக குற்றவியல் நடவடிக்கை

## ஈஸ்டர் தாக்குதல் குறித்து ஆராய்ந்த ஜனாதிபதி ஆணைக்குழு கோரிக்கை

கொழும்பு,பெப்.13

**பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு எதிராக குற்றவியல் நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழு தனது அறிக்கையில் பரிந்துரைத்துள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.**



ஞானசார தேரருக்கு எதிராக குற்றவியல் குற்றச்சாட்டுக்களை சுமத்துமாறு ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2014 ஆம் ஆண்டு அளுத்கம, பேருவளையில் இடம்பெற்ற வன்முறைகளுக்கு காரணமாகயிருந்தார் என்ற குற்றச்சாட்டுக்களின் அடிப்படையிலேயே ஞானசார தேரருக்கு எதிராகக் குற்றவியல் நடவடிக்கைகளை எடுக்குமாறு ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மத மற்றும் இன ரீதியிலான குழப்பங்களை ஏற்படுத்துவதற்கு காரணமான நடவடிக்கைகளில் ஈடுபட உதவிய நபர்கள் மற்றும் அமைப்புகளை அடையாளம் காண்பதற்கு ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்ட ஆணையின் அடிப்படையிலேயே ஞானசார தேரருக்கு எதிராக ஆணைக்குழு குற்றவியல் நடவடிக்கைகளுக்கு பரிந்துரைத்துள்ளது.

எனினும் இதுதொடர்பில் தனக்கு எதுவும் தெரிவிக்கப்படவில்லை என ஞானசார தேரர் தெரிவித்துள்ளார். (எ)

## நீதிமன்றக் கட்டமைப்பு டிஜிற்றல் மயப்படுத்தல்

*கொழும்பு,பெப்.13*

நீதிமன்றக் கட்டமைப்பு அனைத்தையும் டிஜிற்றல் மயப்படுத்துவதற்கான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இதுதொடர்பான உடன்படிக்கை நேற்று முன்தினம் கைச்சாத்திடப்பட்டுள்ளது என நீதியமைச்சு அறிக்கை ஒன்றை வெளியிட்டு தெரிவித்துள்ளது. நீதிமன்றக் கட்டமைப்பில் ஆவணங்களை பராமரித்தல், முகாமைத்துவம், வழக்குகள் தொடர்பான அறிக்கைகளை வைத்திருத்தல், விநியோகத்தில் உள்ளிட்ட அனைத்து நீதிமன்ற நடவடிக்கைகளும் இதன் மூலம் டிஜிற்றல் மயப்படுத்தப்படவுள்ளது என நீதியமைச்சு தெரிவித்துள்ளது. இந்த வேலைத்திட்டத்தை நீதியமைச்சு, நீதிச்சேவைகள் ஆணைக்குழு, தொழில்நுட்ப அமைச்சு என்பன இலங்கைத் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பிரிவுடன் இணைந்து செயல்படுத்தப்படவுள்ளது. (எ)

## உள்நாட்டு துப்பாக்கியுடன் ஒருவர் கைது

*மாத்தறை,பெப்.13*

மாத்தறை - மொரவக்க பகுதியில் உள்நாட்டுத் துப்பாக்கியுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மொரவக்க பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்று முன்தினம் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைளின் போதே 43 வயது சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அவரிடமிருந்து உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட குழல் 12 ரக துப்பாக்கி ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது. சந்தேக நபர் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ)

## யாழ். சிறு மீனவர்களின் பிரச்னைகள் ஆராய்வு

*யாழ்ப்பாணம், பெப். 13*

யாழ்ப்பாண மாவட்டத்தில் சிறு மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் தொடர்பில் ஆராயும் விசேட கூட்டம், தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தினரின் ஏற்பாட்டில் நேற்று இடம்பெற்றது.

சிறு மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் தொடர்பாக கொள்கை வகுப்பொன்றை உருவாக்கும் முகமாக, தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் யாழ். மாவட்ட இணைப்பாளர் தலைமையில், யாழ்.நகரில் உள்ள தனியார் விடுதியொன்றில் இந்தக் கூட்டம் இடம்பெற்றது.

மீனவ அமைப்புகளின் பிரதிநிதிகள், பல்கலைக்கழக புவியியல் துறை விரிவுரையாளர்கள், நீரியல் வளத் திணைக்கள உத்தியோகத்தர்கள், தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் பிரதிநிதிகள் எனப் பலர் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.




## பி.சி.ஆர். இயந்திரங்கள் பழுது தொற்றாளர்களும் அதிகரிப்பு

*கொழும்பு,பெப்.13*

மஹியங்கனையில் இரு தொழிற்சாலைகளில் பரவிய கொரோனா வைரஸ் மற்றும் பி.சி.ஆர். இயந்திரங்கள் பழுதானமையால் அண்மைய நாள்களில் கொரோனா நோயாளர்கள் அதிகம் பதிவாகினர் என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிட்டுள்ள அவர், மஹியங்கனையில் உள்ள இரண்டு தொழிற்சாலைகளின் அதிக எண்ணிக்கையிலான ஊழியர்கள் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

அதேநேரம் அநுராதபுரத்தில் ஒரு இயந்திரம் உட்பட



பல பி.சி.ஆர். இயந்திரங்கள் தற்போது பழுதடைந்துள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது கொரோனாவால் பாதிக்கப்பட்ட நபர்களின் மாதிரிகளை பரிசோதிப்பதில் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

இதனால் பி.சி.ஆர். முடிவுகள் மொத்தமாக அறிவிக்கப்படுகின்றன. கடந்த சில நாள்களாக கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளமைக்கு இதுவும் முக்கிய காரணம்.

இந்நிலையில் அடுத்த சில நாள்களில் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை இலங்கையில் கொரோனாவால் உயிரிழப்பவர்களின் சடலங்களை அடக்கம் செய்ய அனுமதிப்பது தொடர்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ சமீபத்தில் பாராளுமன்றத்தில் அறிவித்திருப்பது தொடர்பில் கொரோனா தடுப்புக்கான தேசிய செயல்பாட்டு மையத்துக்கு இன்னும் அறிவிக்கப்படவில்லை எனவும் இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார். (எ)

# தடுப்பூசி கொள்வனவிற்காக 950 கோடி ரூபா ஒதுக்கீடு!

## நிதி அமைச்சு அறிவிப்பு



கொழும்பு, பெப். 13

**இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ராஜெனகா கோவிஷீல்ட் தடுப்பூசிகளை கொள்வனவு செய்வதற்காக ஐந்து கோடி டொலர் - சுமார் 950 கோடி ரூபா நிதியை ஒதுக்கியுள்ளதாக நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.**

இந்த நிதி மூலம் 90 இலட்சம் தடுப்பூசிகள் கொள்வனவு செய்யப்படவுள்ளன. இவற்றைக் கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று நிதி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் எஸ். ஆர். ஆட்டிகல தெரிவித்தார்.

இராஜதந்திரமட்ட நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டதன் பின்னர் தடுப்பூசிகள் இறக்குமதி செய்யப்படும் என்று அவர் கூறினார்.

இதேவேளை, எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதி தொடக்கம் நாளாந்தம் 6 இலட்சம் கொரோனா தடுப்பூசிகளை நாட்டு மக்களுக்கு ஏற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று கொரோனா தடுப்பு மற்றும் ஆரம்ப சுகாதாரம் தொடர்பான இராஜாங்க அமைச்சின் செயலாளர் விசேட வைத்திய நிபுணர் அமல் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார். (ஐ)



# மின்கம்பங்களை தூக்கிய வாகனம் குடை சாய்ந்தது

கிரேன் ரக வாகனம் குடை சாய்ந்து விபத்துக்குள்ளானது. இதில் தெய்வாதீனமாக எவருக்கும் எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை. நல்லூருக்கு அண்மையில் நேற்று இந்த விபத்து ஏற்பட்டது.

மின்கம்பங்களை தூக்கிய போதே இந்த வாகனம் தடுமாறி குடை சாய்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. தனியார் நிறுவனத்துக்கு சொந்தமான வாகனமே இவ்வாறு விபத்துக்குள்ளானதாகத் தெரியவருகின்றது.

விபத்துக் குறித்து யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## ஈஸ்டர் தாக்குதல் அறிக்கை:

# ஆணைக்குழுவிடம் பிரதியை கோருகிறார் சட்டமா அதிபர்

கொழும்பு, பெப். 13

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து ஆராய்ந்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையின் பிரதி ஒன்றை தமக்கு வழங்குமாறு ஜனாதிபதியின் செயலாளரிடம் சட்டமா அதிபர் கோரியுள்ளார்.

குற்றச்சாட்டுக்களை முன் வைப்பது தொடர்பில் ஆராய்வதற்காகவே இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சட்டமா அதிபரின் இணைப்பு அதிகாரி அரச சட்டவாதி நிஷாரா ஜெயரட்ன இதனை தெரிவித்துள்ளார்.

தாக்குதல் தொடர்பில் ஆராய்ந்த ஜனாதிபதி ஆணைக் குழு தமது அறிக்கையை அண்மையில் ஜனாதிபதியிடம் கையளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நெல்லியடி மத்தி. மாணவர்களுக்கு விழிப்புணர்வு

வடமராட்சி, பெப். 13

நெல்லயடி மத்திய கல்லூரி மாணவர்களுக்கு நேற்று முன் தினம் கொவிட் -19 தடுப்பூசி தொடர்பில் விழிப்புணர்வு இடம்பெற்றது.

பாடசாலை மாணவர்கள் மத்தியில் முன்னெடுக்கப்படும் இத்தகைய கலந்துரையாடல் சமூக மட்டத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் என்ற நோக்கில் இடம்பெற்றது.

கல்லூரி மண்டபத்தில் அதிபர் க.கிருஷ்ணகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், சுகாதார வைத்திய அதிகாரி க.செந்துரன் மற்றும் பொதுச் சுகாதார பரிசோதகர் சு.ரவிவர்மா ஆகியோர் வளவாளர்களாக கலந்துகொண்டனர். (ஐ)

# விமல் வீரவன்ஸவின் மனைவி பொலிஸ் நிலையத்தில் புகார்!



கொழும்பு, பெப். 13

அவதூறு ஏற்படும் வகையில் தகவல்கள் பரப்பப்படுகின்றன என்று தெரிவித்து அமைச்சர் விமல் வீரவன்ஸவின் மனைவி சஷி வீரவன்ஸ குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் நேற்று முறைப்பாடு செய்துள்ளார்.

தாமும் தமது பிள்ளைகளும் அரசியல் நடவடிக்கைகளில் தொடர்புபடுவதில்லை எனவும் சஷி வீரவன்ஸ குறிப்பிட்டுள்ளார்.

அரசியல்வாதிகளின் செயல்பாடுகள் தொடர்பில் விமர்சிக்கவும் கண்காணிக்கவும் மக்களுக்கு உரிமை உண்டு. எனினும், அது தொடர்பில் ஆராய்வதற்கு துணிச்சல் இல்லாதவர்கள் மனைவி, பிள்ளைகளை அவதூறு செய்வது கீழ்த்தரமானதும் வெட்கப்பட வேண்டியதுமான செயல்பாடு என்று சஷி வீரவன்ஸ குறிப்பிட்டுள்ளார். இவ்வாறான செயல்பாடுகளால் தமக்கும் தமது பிள்ளைகளுக்கும் உள ரீதியான தாக்கம் ஏற்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# கிளிநொச்சி பாடசாலைக்கு கணனிகள் அன்பளிப்பு!

கிளிநொச்சி, பெப். 13

'வன்னி ஹோப்' நிறுவனத்தின் நிதி உதவியுடன் மலையக சமூக அபிவிருத்திப் பேரவையால் கிளிநொச்சி சிவபாத கலையகம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்களுக்கு ஒரு தொகுதி கணனிகள் மற்றும் போட்டோ பிரதி இயந்திரம் என்பன வழங்கி வைக்கப்பட்டன.

கிளிநொச்சி மாவட்டத்தில் வளப்பற்றாக்குறையை எதிர்கொண்டுள்ள நிலையிலேயே இந்தப் பாடசாலைக்கு கணனிகள் வழங்கப்பட்டன. அத்துடன், கணனி மயப்படுத்தப்பட்ட கல்விச் செயல்பாடும் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதனை வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எல். இளங்கோவன் ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில் மலையக சமூக அபிவிருத்தி பேரவையின் பணியாளர்கள், பாடசாலை மாணவர்கள், கல்வி அதிகாரிகள் என பலர் கலந்து கொண்டனர். (ஐ-3)

# வடிசாராயம் வடித்த இருவர் எஸ். ரி. எவ்விடம் சிக்கினர்!

யாழ்ப்பாணம், பெப். 13

செம்பியன்பற்று பகுதியில் சட்டத்துக்கு புறம்பான வடிசாராய உற்பத்தியில் ஈடுபட்ட இருவர் விசேட அதிரடிப் படையினரால் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டனர்.

இருவேறு இடங்களில் முன்னெடுக்கப்பட்ட சுற்றுக்காவல் நடவடிக்கையிலேயே இந்த இரு சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

சட்டத்துக்குப் புறம்பான வகையில் வடிசாராய உற்பத்தியில் ஈடுபட்ட 25 வயது நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து 45 லீற்றர் வடிசாராயம் மற்றும் அதனைத் தயாரித்த உபகரணமும் கைப்பற்றப்பட்டது.

மற்றொரு சம்பவத்தில் 65 வயது நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து வடிசாராயம் தயாரிப்பதற்கான உபகரணங்கள் கைப்பற்றப்பட்டது.

சந்தேக நபர்கள் இருவரும் பளை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

சிறப்பு அதிரடிப் படையின் வடமராட்சிக்குப் பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகர் புஷ்ப குமார தலைமையிலான அணி இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்தது. (ஐ-3)

# அரச அடக்குமுறையின் வெளிப்பாடே பொத்துவில் - பொலிகண்டி பேரணி!

## நிலைப்பாட்டை சொல்கிறது ஜே.வி.பி.



கொழும்பு, பெப். 13

அரசாங்கத்தின் அடக்குமுறைகளால் அதிருப்தியடைந்த தமிழ்மக்களின் உணர்வு ரீதியான வெளிப்பாடே பொத்துவில் - பொலிகண்டி வரையான பேரணியாகும். எனினும், இனவாதத்தை அடிப்படையாகக் கொண்டு அரசியல் செய்யும் சரத் வீரசேகர போன்றவர்கள், பேரணியில் கலந்து கொண்டவர்களின் உணர்வுகளைப் புரிந்துகொள்ளாமல் அவர்களைக் கைது செய்ய வேண்டும் என்று பேசுவதில் ஆச்சரியம் எதுவுமில்லை, என்று மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான பேரணி தொடர்பில் மக்கள் விடுதலை முன்னணியின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்துகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:

கடந்தகால அரசாங்கங்களின் செயற்பாடுகளினால் தமிழ்மக்கள் மத்தியில் ஏற்பட்ட அதிருப்தியின் வெளிப்பாடாகவே இந்தப் போராட்டம் அமைந்திருக்கிறது.

குறிப்பாக கடந்த ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தினால் ஏற்பட்ட ஏமாற்றம் மற்றும் தற்போதைய அரசாங்கத்தின் அடக்குமுறைகள், அழுத்தங்களுக்கு எதிரான கிளர்ச்சியே அந்தப் பேரணியாகும்.

பேரணி ஆரம்பமான போது, சுமார் 20 பேர் மாத்திரமே இருந்தார்கள். எனினும், அது நிறைவடையும் போது பெருமளவான மக்கள் திரண்டு பேரணிக்கு ஆதரவு வழங்கியிருந்தனர்.

சரத் வீரசேகர உள்ளடங்கலாக தெற்கிலுள்ள அநேகமானோர் இனவாதத்தை அடிப்படையாகக் கொண்டே அரசியலில் ஈடுபட்டுவருகின்றனர். எனவே, அவர்கள் பேரணியில் கலந்துகொண்ட பொதுமக்களின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு கருத்துக்களை வெளியிடவேண்டும் என்று எதிர்பார்க்க முடியாது.

நீதிமன்றத்தினால் குற்றவாளிகள் என்று தீர்ப்பளிக்கப்படுவோரின் படங்கள் பகிரங்கப் படுத்தப்படும் என்று அண்மையில் அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்திருந்தார். உண்மையில் குற்றவாளிகளுக்குத் தண்டனைக்காலம் நிர்ணயிக்கப்படுவதற்கான காரணம், அக்காலப் பகுதியில் அவர்கள் தமது தவறை உணர்ந்து திருந்தி வாழவேண்டும் என்பதற்காகவேயாகும்.

இதனைப் புரிந்து கொள்ளாமல் குற்றவாளிகளின் புகைப்படங்களைப் பகிரங்கப் படுத்துவதாகக்கூறும் ஒருவரால், போராட்டத்தில் கலந்து கொண்ட மக்களின் உணர்வுகளை எவ்வாறு புரிந்துகொள்ள முடியும்?- என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu



# ஊடகவியலாளர் சத்தியமூர்த்திக்கு மட்டக்களப்பில் நினைவேந்தல்

மட்டக்களப்பு, பெப். 13

இறுதி யுத்தத்தில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் புண்ணியமூர்த்தி சத்தியமூர்த்தியின் 12ஆவது ஆண்டு நினைவு நிகழ்வு நேற்று மட்டு. ஊடக அமையத்தில் நடைபெற்றது.

மட்டு. ஊடக அமையம், கிழக்கு மாகாண தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் ஆகியனவற்றின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

மட்டகளப்பு தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் வா. கிருஷ்ணகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், சிரேஸ்ட ஊடகவியலாளருமான பா.அரியநேத்திரன், மட்டக்களப்பு மாநகரசபை உறுப்பினரும், ஊடகவியலாளருமான சிவம் பாக்கியநாதன் உட்பட ஊடகவியலாளர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இதன் போது முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் சிரேஷ்ட ஊடகவியலாளர் கங்காதரன் ஆகியோர் அமரர் சத்தியமூர்த்தியின் திருவுருவப் படத்திற்கு மலர்மாலை அணிவித்தனர். அத்துடன், பங்கேற்ற ஊடகவியலாளர்கள் சுடரேற்றி, மலர்தூவி அஞ்சலி செலுத்தினர்.

இதன்போது யுத்த காலத்தில் ஊடகவியலாளர்கள் எதிர்கொண்ட நெருக்கடிகள் மற்றும் தமிழ் ஊடகவியலாளர்களின் படுகொலைகள் தொடர்பில் சிரேஷ்ட ஊடகவியலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான பா.அரியநேத்திரன் சிறப்புரையாற்றினார். (ஐ)

# லித்தியம் மின்கலங்களை தயாரிக்க அரசு திட்டம்!



கொழும்பு, பெப். 13

நாட்டில் கிடைக்கும் கிராபைற் (Graphite) கற்களை பயன்படுத்தி நவீன லித்தியம் அயன் மின்கலங்களை ( Lithium Ion Battery) தயாரிக்கும் நிறுவனத்தை நிர்மாணிக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொருளாதார மறுமலர்ச்சி மற்றும் வறுமை ஒழிப்பு ஜனாதிபதி செயலணியின் தலைவர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

திறன் மேம்பாடு, தொழில்கல்வி, ஆராய்ச்சி இராஜாங்க அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியின் பயனாக நவீன மின்கல தயாரிப்புகளுக்கு உள்ளூர் கிராபைற் கற்களை பயன்படுத்துவதற்கான திறனை தேசிய அடிப்படை ஆய்வுகள் நிறுவனம் கண்டறிந்துள்ளது.

ஏனைய நாடுகளில் உற்பத்தி செய்யப்படும் லித்தியம் அயன் மின்கலங்களைவிட அதிக திறன் கொண்ட மின்கலங்களை உற்பத்தி செய்வதன் மூலம் உலக சந்தையை ஈர்க்கும் சாத்தியம் உள்ளதாக நம்பப்படுகிறது.

இந்த நோக்கத்திற்காக அமைக்கப்படும் அரசுக்கு சொந்தமான நிறுவனத்திற்கு மூலதனமாக அரசு நிறுவனங்களும் அரசாங்க நிதியுதவியும் பயன்படுத்தப் படவுள்ளது. (ஐ)

# தொற்றால் இறப்போரின் உடல்கள் எரியூட்டப்படுவதில் மாற்றமில்லை

## சுகாதார தொழில்நுட்ப குழு திட்டவட்டம்

கொழும்பு, பெப். 13

**கொரோனா வைரஸால் மரணிப்பவர்களின் உடல்களை தகனம் செய்ய வேண்டும் என்ற சுகாதார அமைச்சின் தொழில்நுட்பக் குழுவின் தீர்மானத்தில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை என்று அந்தக் குழுவின் தலைவர் சட்ட வைத்திய அதிகாரியான சன்ன பெரேரா தெரிவித்தார்.**

கொரோனாவால் மரணிக்கும் முஸ்லிம்களின் உடல்களை அடக்கம் செய்வதற்கு அனுமதியளிக்கப்படும் என்று கடந்த புதன்கிழமை பாராளுமன்றத்தில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அறிவித்திருந்தார். இந்நிலையில், அது தொடர்பான தீர்மானங்களை விடயத்துடன் தொடர்புடைய தொழில்நுட்ப குழுவே எடுக்க வேண்டும் என்று இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் குறித்த தொழில்நுட்பக் குழுவின் தலைவர் சன்ன பெரேரா கருத்துத் தெரிவிக்கையில், 'அரசியல் தீர்மானங்களுக்காக எங்களின் நிலைப்பாட்டை மாற்றியமைக்க முடியாது” என்று கூறியுள்ளார்.

“விசேட வைத்திய நிபுணர்களை கொண்ட குழுவால் எடுக்கப்படும் தீர்மானங்களை ஆட்சியாளர்கள் மாற்ற முடியும். அதற்கு எமது குழுவால் எதிர்ப்பு வெளியிட முடியாது. ஆனால், எமது குழுவின் தீர்மானத்தை அரசியல் காரணங்களுக்காக மாற்றியமைக்க முடியாது. கொரோனா தொற்றால் உயிரிழப்பவர்களின் உடல்களைத் தகனம் செய்ய வேண்டும் என்ற சுகாதார அமைச்சின் தொழில்நுட்பக் குழுவின் தீர்மானத்தில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை” - என்று சன்ன பெரேரா மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

அருந்ததி
இணைய திருமண சேவை

| மணமகன் விபரம் | மணமகள் விபரம் |
| --- | --- |
| 15928\|வே\|1988<br>கொழும்பு \| கிறிஸ்தவம்<br>Operations Manager<br>Sri Lanka\|விசாகம்(துலாம்)<br>170செ.மீ | 15673\| வே\|1994<br>புத்தூர்\| இந்து<br>Public Relation Officer\|<br>Sri Lanka \|சூ.செவ் : 07<br>அத்தம்(கன்னி) \|158செ.மீ |
| 10075\|வே \|1981<br>கொக்குவில்\|இந்து<br>Doctor \|Sri Lanka\| கி.பா :4.50<br>விசாகம்(துலாம்)\|167செ.மீ | 16808\| வே \|1995<br>கொண்டவில்\|இந்து<br>Sri Lanka\|N/A \| சூரி.செவ்: 12<br>மூலம்(தனுசு)\|154செ.மீ |
| 14451\| வே\|1983<br>காரைநகர்\| இந்து\|Sri Lanka<br>Analyst\|அனுஷம்(விருச்சிகம்)<br>கி.பா :20\| செவ்: 02\|160செ.மீ | 17573\| ப \|1982<br>சுன்னாகம்\| இந்து\| கி.பா :75<br>N/A\|Sri Lanka\| சூ.செவ் : 12<br>கேட்டை(விருச்சிகம்) \|172செ.மீ |
| 16424\|கு \|1981<br>சங்கானை\| இந்து<br>சூ.செவ்:11\| Staff<br>France \|அஸ்வினி(மேடம்)<br>180செ.மீ | 12953\| வே\|1992<br>மானிப்பாய்\|Sri Lanka\|லக்.செவ்<br>Office Incharge\|இந்து<br>152செ.மீ \| கி.பா :52<br>உத்திரட்டாதி(மீனம்) |
| 17543\| கோ \|1994<br>கைதடி\| இந்து \|செவ்:02<br>Staff\| Switzerland பரணி(மேடம்)<br>171செ.மீ | 17087\| ந \|1995<br>நீர்வேலி\|கிறிஸ்தவம் \|லக்.செவ்<br>Cashier\|USA\|158செ.மீ<br>அஸ்வினி(மேடம்) |

20, கே.கே.எஸ் வீதி கொக்குவில் யாழ்ப்பாணம்
0777 164 524 www.arunthathee.com

# காதலர் தினத்தில் ஏமாந்துவிடாதீர்கள் பொலிஸ் பேச்சாளர் மீண்டும் எச்சரிக்கை



கொழும்பு, பெப். 13

எதிர்வரும் 14 ஆம் திகதி காதலர் தினத்தை முன்னிட்டு சமூக வலைத்தளங்களில் மோசடிகள் இடம்பெறலாம். எனவே, இந்த விடயத்தில் அவதானமாக செயல்பட வேண்டும் என்று பொலிஸ் ஊடக பேச்சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹன நேற்றும் தெரிவித்தார்.

அத்தோடு, காதலர் தினத்தையொட்டி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன சட்ட விரோத கொண்டாட்டங்கள் தொடர்பாக தகவல்கள் கிடைத்துள்ளன எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, போலிச் செயல்பாடுகள் மூலம் பொதுமக்கள் ஏமாற்றப்படலாம். எனவே, இவ்வாறான மோசடிகள் தொடர்பில் இணையம் மற்றும் சமூக வலைத்தளங்களைக் கண்காணிப்பதற்குச் சிறப்புக் குழு செயல்பாட்டில் உள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் காதலர் தின விழாக்கள் மற்றும் கொண்டாட்டங்களை ஏற்பாடு செய்வதற்குச் சுகாதாரப் பிரிவினரின் அனுமதி பெற்றிருக்க வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இவ்வாறான காலப்பகுதிகளில் போலியான அழைப்புகள் தொலைபேசிகளுக்கு வரலாம் எனவும் எச்சரித்துள்ள அவர், பண மோசடிகளும் இடம்பெற வாய்ப்புள்ளது எனவும் அவர் எச்சரித்தார். (ஐ)

# மாணவனை தாக்கியமைக்காக அரசு, ஆசிரியரை நட்டஈடு வழங்க பணிப்பு!

கொழும்பு, பெப். 13

உடல் ரீதியான தண்டனை காரணமாக செவிப்புலன் திறனை இழந்த மாணவர் ஒருவருக்கு இழப்பீடாக அரசு மற்றும் ஆசிரியர் இணைந்து 6 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலுத்த வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

அரசாங்கம் 5 இலட்சம் ரூபா இழப்பீட்டையும், மாணவரை அறைந்த ஆசிரியர் தனிப்பட்ட நிதியிலிருந்து ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவையும் 6 மாத காலத்துக்குள் செலுத்த வேண்டும் என்று உயர் நீதிமன்றம் கோடி காட்டியுள்ளது.

2017ஆம் ஆண்டு நடந்த சம்பவம் தொடர்பாக மாணவரின் பெற்றோர் மாத்தறை பொலிஸ் நிலையத்தில் ஆசிரியர் மீது வழக்கு பதிவு செய்தனர்.

ஆசிரியரின் தண்டனை காரணமாக மாணவர் காது கேட்கும் திறனை இழந்து விட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**

*6.00 மணி* : பக்திப்பாடல்கள்
*6.30 மணி* : வணக்கம் டான்
*6.31 மணி* : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
*6.35 மணி* : மதம் சார்பான நற்சிந்தனைகள்
*6.55 மணி* : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன்
சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
*7.05 மணி* : உளவியல் கருத்து
வழங்குபவர் : வழங்குபவர்
திருமதி .கோகிலா மகேந்திரன்
*7.15 மணி* : கதைவழி அறமொழி
வழங்குபவர் : திரு. எப்.எக்ஸ்அன்ரன்
கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்
*7.30 மணி* : பத்திரிகைகள் ஒரு பார்வை
*8.30 மணி* : காலை செய்திகள்
*9.00 மணி* : கலாட்டா காலை-நேரலை
*10.30 மணி* : TIK TOK
*11.00 மணி* : மைதானம்-வாராந்த விளையாட்டு
நிகழ்வுகளின் தொகுப்பு

பகல்

*12.00 மணி* : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
*1.00 மணி* : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி
*1.30 மணி* : WEEK END MOVIE - ஜே ஜே




*4.30 மணி* : காட்டூன் தமிழ்
*5.00 மணி* : அந்தி மந்தாரை (நேரலை)
*6.00 மணி* : எது சரி? எது பிழை
பொத்துவில் முதல் பொலிகண்டிவரையான
பேரணியில் நடந்தவை



இரவு

*7.00 மணி* : சுப்பர் குறூப் - இசைக்குழுக்களுக்கு
இடையிலான போட்டி நிகழ்ச்சி



*8.00 மணி* : இரவுச் செய்திகள்
*9.00 மணி*: சொல்லாடுகளம்-காதலர் தின சிறப்பு




*10.00 மணி* : யாவரும் கேளீர்

## DAN COMEDY HD

**காலை**

*6.00 மணி* : சிரி சிரி சிரி
*8.00 மணி* : சிரிப்பு சரடிவெடி
*10.00 மணி* : ஒரு பட கொமடி
*11.00 மணி* : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

*1.00 மணி* : நகைச்சுவை மன்னன்
வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
*3.00 மணி* : குண்டக்க மண்டக்க
*5.00 மணி* : ஒரு பட கொமடி
*6.00 மணி* : கொமடி கலாட்டா

**இரவு**

*8.00 மணி* : ஒரு படக்கொமடி
*9.00 மணி* : சிரிப்போ சிரிப்பு
*10.00 மணி* : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**

*6.00 மணி* : பனிப்பூக்கள்
*7.00 மணி* : திசை எட்டும் இசை எட்டும்
*8.00 மணி* : வணக்கம் டான் மியூசிக்
*9.00 மணி* : மெல்லிசை
*10.00 மணி* : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

*12.00 மணி* : ராஜா ராணி
*1.00 மணி* : விசை இசை
*3.00 மணி* : வட்ஸ் அப் (நேரலை)
*4.00 மணி* : டீ டைம் ராகங்கள் (நேரலை)
*5.00 மணி* : இனிது இனிது
*6.00 மணி* : என்றென்றும் இசை

**இரவு**

*7.00 மணி* : ஓய்வெடு நிலவே
*8.00 மணி* : காற்றில் வரும் கீதம்
*9.00 மணி* : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**

*5.15 மணி* : தரம் 06 - விஞ்ஞானம்
*6.00 மணி* : தரம் 07 - கணிதம்
*6.45 மணி* : தரம் 08 - தமிழ்
*7.30 மணி* : தரம் 09 - கணிதம்
*8.15 மணி* : தரம் 10 - தமிழ்
*9.00 மணி* : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) வரலாறு
*10.00 மணி* : க.பொ.த உயர்தரம்
(வணிகப்பிரிவு) கணக்கீடு
*11.00 மணி* : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) கணிதம்

**பகல்**

*12.00 மணி* : தரம் 10 - விஞ்ஞானம்
*1.00 மணி* : தரம் 09 - கணிதம்
*2.00 மணி* : தரம் 06 - ஆங்கிலம்
*3.00 மணி* : க.பொ.த சாதாரண தரம் கணிதம்
*3.40 மணி* : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
*4.20 மணி* : க.பொ.த சாதாரண தரம் தகவல் விஞ்ஞானம்
*5.00 மணி* : க.பொ.த சாதாரண தரம் வர்த்தகம்
*5.40 மணி* : க.பொ.த சாதாரண தரம் சைவ சமயம்
*6.20 மணி* : க.பொ.த சாதாரண தரம் தமிழ்

**இரவு**

*7.00 மணி* : க.பொ.த உயர்தரம் வணிகப்பிரிவு
மாதிரி வினாத்தாள்

## ஐ ரீவி

**காலை**

*5.00 மணி* : சிவாய மந்திரம்
*6.00 மணி* : சுப்ரபாதம்
*6.30 மணி* : சுப்ரபாதம்
*7.00 மணி* : இன்றைய சிந்தனை
*7.05 மணி* : இன்றைய நாள்
*7.20 மணி* : சின்மய சிந்தனை
*7.30 மணி* : மங்கள இசை
*8.00 மணி* : அருளுரை
*8.30 மணி* : திருவாசகம்
*9.00 மணி* : யாழ்ப்பாணம் புங்குடுதீவு வரசித்தி
விநாயகர் ஆலய திருவிழா
*10.00 மணி* : ஐயப்பன் பாடல்கள்
*10.30 மணி* : பஜனை
*11.00 மணி* : பக்திமலர்

**பகல்**

*12.00 மணி* : திரையில் பக்தி
*12.30 மணி* : யாழ்ப்பாணம் பருத்தித்துறை
பசுபதீஸ்வரர் சுவாமி ஆலய திருவிழா
*6.00 மணி* : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

*7.00 மணி* : செய்திகள்
*7.30 மணி* : அருளுரை
*8.00 மணி* : யாழ்ப்பாணம் புங்குடுதீவு வரசித்தி
விநாயகர் ஆலய திருவிழா

## CHANNEL HOLY MARY

**காலை**

*7.00 மணி* : ஆலயப் பாடல்கள்
*8.00 மணி* : ஜெபமாலை
*9.00 மணி* : மாதா மன்றாட்டு மாலை
*10.00 மணி* : திருப்பலிப்பாடல்கள்
*10.30 மணி* : புனித மிக்கேல் மன்றாட்டு
*11.30 மணி* : ஜெபமாலை

**பகல்**

*12.00 மணி* : பாடல்
*1.00 மணி* : மட்டக்களப்பு திருப்பலி
*2.00 மணி* : திருகோணமலைத்திருப்பலி
*3.00 மணி* : பாடல்
*4.30 மணி* : திருகோணமலை திருப்பலி

## Pirai Television

**காலை**

*6.00 மணி* : கிராத்
*7.00 மணி* : இறை சிந்தனை
*7.30 மணி* : இஸ்லாமிய பாடல்
*8.00 மணி* : கலந்துரையாடல்
*9.00 மணி* : இஸ்லாமிய சீரிஸ்
*10.00 மணி* : மனதோடு பேசலாம்
*10.30 மணி* : கண் வசண்ணம் கை வண்ணம்
*11.00 மணி* : சுவனப்பாதை
*11.30 மணி* : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

*12.00 மணி* : லுகர் அதான்
*12.30 மணி* : இஸ்லாமிய வரலாறு
*1.00 மணி* : இஸ்லாமிய திரைப்படம்
*2.00 மணி* : கஸீதா
*2.30 மணி* : இறை சிந்தனை
*3.00 மணி* : பாடல்கள்
*3.30 மணி* : இஸ்லாமிய உலகம்
(மறு ஒளிபரப்பு)
*4.00 மணி* : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
*5.00 மணி* : இறை தென்றல்
*6.00 மணி* : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

*7.00 மணி* : பிறை பிரசங்கம்
*8.00 மணி* : இஸ்லாமிய வரலாறு
*8.30 மணி* : மனதோடு பேசலாம்

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 13.02.2021 அன்று
ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.